வெள்ளி | ஆகஸ்ட் 1

📖 மாலை வாசகம் – 2 கொரி 13:5

# விசுவாசித்தவர்கள் யார்?

முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்ககுணத்தோடும், பொறாமையோடும் ஜீவனும் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படதக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கின்றவர்களாயுமிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும், மனுஷர்மேலுள்ள அன்பும்பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் அவர் நம்மை இரட்சிக்கவில்லை. நாம் யாவரும் நித்திய ஆக்கினைக்கு பாத்திரராக இருந்தோம். நாம் அடைய வேண்டிய அந்தத் தண்டனையை, தம்முடைய இரக்கத்தினாலே மன்னித்தார். நீதிமான்கள் என்று அழைக்கப்படுவதற்கும், நித்திய ஜீவனுக்கு தகுதியற்றவர்களாகவும் இருந்த நம்மை, தம்முடைய கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு தகுதிப்படுத்தி, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார். இது தேவனுடைய ஈவு. இதைக் குறித்த வசனங்களை தீத்து மூன்றாம் அதிகாரத்திலும், எபேசியர் இரண்டாம் அதிகாரத்திலும் காணலாம். நம்முடைய ஆன்மீன இரட்சிப்பைப் பற்றி கூறும் பகுதியிலே, தேவனுடைய தயவு, அன்பு, இரக்கம், கிருபையை போன்ற தெய்வீக அம்சங்களை காணலாம். நம்முடைய பகுதியிலிருந்து விசுவாசத்தை நாம் காண்பிக்க வேண்டும். விசுவாசம் என்று கூறும் போது, அதிலே, மனத்தாழ்மை, மனந்திரும்புதல், கீழ்படிதல், அர்ப்பணிப்பு போன்றவை களை உள்ளடக்கியதாக இருக்கும். இவைகள் வழியாக நாம் மறுபடியும் பிறந்தவர்கள் அல்லது வேறுபிரிக்கப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்கின்றோம். அப்படியாக தங்களை தேவனிடத்தில் தங்களை அர்பணித்து, மறுபடியும் பிறந்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றவர்களுடைய வாழ்க்கையிலே உலகத்திலிருந்து வேறுபிரிக்கபட்டவர்களுக்குரிய சுபாவங்கள் கிரியைகளிலே வெளிப்பட ஆரம்பிக்க வேண்டும். அப்படி வெளிப்படாத விடத்து, அவர்களுடைய மனத்தாழ்மையும், கீழ்படிவும் மனந்திரும்புதலும், அர்ப்பணிப்பும் எப்படிப்பட்டதோ என்பதைக் குறித்த கேள்வி எழுகின்றது. அவர்கள் உண்மையாகவே மீட்பர் இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டார்களா அல்லது மற்றவர்கள் செய்கின்றார்கள் எனவே நானும் செய்வேன் என்று சடங்காச்சராமாக மதக்கிரிகைகளை நடப்பித்தார்களா? தேவன் ஒருவரே அதை அறிவார்..

**மாற்கு 16:16**

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.**

**ஜெபம்**: இலவசமாக கிருபையினாலே என்னை இரட்சித்த தேவனே, என்னுடைய வாழ்க்கையிலே வேறு பிரிக்கப்பட்டவர்களுக்குரிய சுபாவங்கள் காணப்படும்படி எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இரசிப்பு கனிகளால் உறுதிசெய்யப்படும்

இரட்சிப்பு இலவசம். அது தேவ ஈவு. மீட்பர் இயேசுவை விசுவாசிக்கும் போது, அவர் சகல பாவங்களையும் மன்னிக்கின்றார். இரட்சிப்படைந்தவர்களுக்கு எப்படியும் நித்திய ஜீவனை கொடுப்பார் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றது. உண்மையான ஒருவன் மனம் திரும்பனான என்பது யாருக்கு தெரியும்? ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், விசுவாசியாக இருந்த ஒரு பெண்ணை விரும்பியதால், அவளை பின்தொடரும்படி, அவள் செல்லும் ஆலயத்திற்கு சென்றான். நாள டைவிலே தன்னுடைய விருப்பத்தை அவளுக்கு தெரிவித்தாள். அதற்கு அவள்: தன் பெற்றோர் விசுவாச மார்க்கதிலில்லாதவர்களை திருமணம் செய்ய அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறினாள். அதனால், அவன் ஞானஸ்நானம் பெறும்படிக்கு, வேதப்படிப்பு வகுப்புகளுக்கு சென்று, ஞானஸ்நானத்தை பெற்று, தவறாமல் ஆலயத்திலே நடக்கும் ஆராதனைகளுக்கு செல்ல ஆரம்பித்தான். தானதர்மங்களை செய்து, தசமபாக காணிக்கை போன்றவற்றில் உண்மையாக இருந்து வந்தான். அதைக் கண்டு கொண்ட அந்த பெண்ணின் பெற்றோர் தங்கள் குடும்பதில் ஏற்றுக் கொண்டார்கள். திருமணம் நடந்து பல வருடங்களுக்கு பின்னர், குடும்பத்திலே பிரச்சனைகள் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் குற்றம் சாற்ற தொடங்கினார்கள். இப்படியாக மாதங்கள் கடந்து சென்ற பின்னர், அந்த பெண்ணின் பெற்றோர், அந்த மனிதனை நோக்கி: நீ இப்படியெல்லாம் செய்து வருகின்றாய். நீ தேவனுக்கு பயப்படுவதில்லையா என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதனானவன்: அவர்களை நோக்கி, எனக்கு இவற்றிலே நம்பிக்கையில்லை. நான் உங்கள் மகளை திருமணம் செய்து கொள்ளும்படி உங்கள் அனுமதியை பெற்றுக் கொள்ளும்படிக்காகவே ஆலயத்திற்கு சென்றேன் என்று கூறினான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, விலை மதிக்க முடியாத இரட்சிப்பை தேவன்நமக்கு இலவசமாக கொடுத்திருக்கின்றார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு மனிதர்கள் இரட்சிப்படைகின்றார்கள். ஆனால், அவர்கள் உண்மையாக விசுவாசித்தார்களா அல்லது சுய இலாபத்திற்காக இரட்சிக்கப்பட்டவர்கள் போல தங்களை காண்பிக்கின்றார்களா என்பது அவர்கள் தங்கள் வாழ்க்கையிலே காண்பிக்கும் கனிகளால் அறியப்படும். ஏனெனில், பரமபிதா நடாத நாற்றுக்களும் உண்டு. சத்துருவானவன் போட்ட நாற்றுக்களைப் போன்றவர்களும் உண்டு. அறுப்பு காலத்தில் யாவும் வெளிப்படும்.

**லூக்கா 6:44**

அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்;

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, நான் நல்ல கனிகளை கொடுக்கும் மரத்தைப் போல நான் இருக்கும்படிக்கு, உண்மையுள்ள இருதயத்தோடு உம்மை பற்றி கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆகஸ்ட் 3

📖 மாலை வாசகம் – மத்தேயு 7:14 –15

# இருதயத்தை ஆராய்ந்து பாருங்கள்

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னிபார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். என்று மன்னிப்பபை குறித்த நிபந்தனையை ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, ஒருவனுடைய குற்றத்தை மன்னிக்காமல் இருப்பது இன்னுமொரு குற்றமாக மாறிவிடுகின்றது. இரட்சிப்பு எங்கள் கிரியைகளினால் உண்டாவதில்லை. அது கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு உண்டாகின்றது. அது இலவசமானது. எனவே, மீட்பர் இயேசுவை விசுவாசிக்கும் போது, தாங்கள் மற்றவர்களை மன்னிக்காமல் இருக்கும் குற்றத்தையும் அவர் மன்னிப்பார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்று சிலர் கூறிக் கொள்கின்றார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்பது மாறாத சத்தியம். யார் அந்த சுத்தரி கரிப்பை பெற்றுக் கொள்கின்றார்கள்? மீட்பர் இயேசுவை விசுவாசிக் கின்றவர்கள், மனந்திரும்பி தங்களுடைய பாவங்களை அறிக்கை யிடுகின்றார்கள். அவர்களுக்கு அவர் மன்னிக்கின்றார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டவனிடத்தில் தெய்வீக சுபா வத்திற்குரிய கனிகளும், கனி கொடுக்க வேண்டும் என்கின்ற வாஞ் சையும் காணப்படும். மனம் இரங்கி, மற்றவர்களுடைய குற்றங்களை மனப்பூர்வமாக மன்னிப்பது அந்தக் கனிகளிலே ஒன்று. விசுவசி த்ததினாலே நான் இரட்சிப்பை பெற்றுக் கொண்டேன் என்று கூறும் மனிதனொருவன், என் குடும்பத்திற்கு குற்றம் செய்தவனை நான் மன்னி க்கவே மாட்டேன் என்று மனதை கடினப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தால், அவன் கர்த்தர்பேரில் கொண்டிருக்கும் விசுவாசம் உண்மை யானதா என்ற கேள்விக்கு இடமுண்டாகும். அவனுடைய விசுவாசம் மாயமானதாக இருந்தால், அவன் உண்மையாக இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வில்லை. பிரியமானவர்களே, தேவன் எல்லா பாவங்களையும் மன்னிப்பார் என்று, பாவத்திலே வாழ்வது, பரிசுத்த வாழ்வு அல்ல. எனவே இரட்சிப்படைந்தேன் என்று கூறுபவனுக்கு கனி கொடுக்கும் வாழ்க்கை இன்றியமையாதது. மன்னிப்பை பெற்ற உங்களில் மன்னிக்க வேண்டும் என்கிற எண்ணம் உங்களில் வளர்ந்து பெருகுவதாக.

**2 கொரிந்தியர் 13:5**

**மனுஷருடைய தப்பிதங் நீங்கள் விசுவாசமுள்ள வர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்;**

**ஜெபம்**: மனம் இரங்கும் பரலோக தந்தையே, உம்முடைய பிள்ளையாகிய நான், மன்னிப்பதை சுபாவமாக கொண்டிருக்கும்படி, நாளுக்கு நாள் உமது சாயலிலே வளர்ந்து பெருகும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பரம பிதா நடாத நாற்று

ஒரு ஊரிலே வாழ்ந்த மனிதனானவனொருவன், தன் வீட்டின் பிற்புறத்திலே சிறிய காய்கறி தோட்டம் செய்தான். அதிலே சில வகையான காய்கறிகளின் விதைகளை விதைத்து, வளர்ந்து வரும் நாற்றுக்களை பராமரித்து வந்தான். அந்த நாற்றுக்களோடு, சில களைகளும் அந்த தோட்டத்திலே சிறிய நாற்றுக்களைப் போல வளர்ந்து வந்தது. அந்தக் களைகள் அந்த தோட்டத்திலே இருந்தததினால், அவைகளையும் அந்த தோட்டம் செய்யும் மனிதனின் பராமரிப்பை பெற்றுக் கொண்டது. குறித்த நேரத்திலே தண்ணீரும், ஏற்ற காலத்திலே பசளையையும் பெற்றுக் கொண்டது. தோட்டத்தை சுற்றி போடப்பட்டிருந்து பாதுகாப்பின் வேலியும், சிறிய விலங்குள் உட்செல்லாதபடிக்கு, மூடப்பட்டிருந்த கம்பி வளைகளும் அந்த களைகளுக்கும் பாதுகாப்பை கொடுத்தது. ஆனால், அந்த களைகளோ, அந்த தோட்டம் செய்யும் மனிதன் நட்ட நாற்றுக்கள் அல்ல. அவைகள் குறித்த காலத்திலே வேரோடு பிடுங்கப்பட்டு, அவ்விடத்திலிருந்து அகற்றப்படும். நம்முடைய பரமபிதாவானவர், தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையை பெய்யப்பண்ணுகின்றார். ஆனால், அவர்கள் யாவரும் குமாரனாகிய இயேசுவை விசுவசிப்பவர்கள் அல்ல. அநேகர் குமாரனாகிய இயேசுவை மறுதலிக்கின்றார்கள். ஆலயத்திற்கு செல்கின்றவர்கள் யாவரும் இரட்சிப்படைந்தவர்களா? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளகத் தீர்க்கப்படுவான் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார் (மாற்கு 16:16). தேவ கிருபை என்றுமுள்ளது! ஆனால், அதை பெற்றுக் கொண்ட யாவரும், உண்மை மனதுடன் விசுவசிக்கின்றார்களா? காலத்திலே உண்டாகும் கனிகள் அதை வெளிப்படுத்தும். எனவே, ஒருவன் தன் இருதயத்திலே விசுவசிக்காமல், தேவ கிருபையைப் பற்றி மேன்மைபாராட்டி, இரட்சிப்பு இலவசம், நான் எப்படியும் பரலோகம் சென்று விடுவேன் என்று கூறுவனின் முடிவு தேவ குமாரானாகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உறுதி செய்யப்படும். ஆகையால், நீங்கள் உள்ளத்திலே விசுவாசித்திருந்தால், மனத்திரும்புதலுக்கேற்ற கனிகளை கொடுங்கள். பிதா உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் உங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னிக்க பழகும்படி, தூய ஆவியானவர் உங்களின் கிரியை செய்ய இடங்கொடுங்கள்.

**மத்தேயு 15:13**

அவர் பிரதியுத்தரமாக: என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

**ஜெபம்:** பெலவீனங்களிலே என்னை பெலப்படுத்துகின்ற தேவனே, நான் உம்மைப்போல மாறும்படிக்கு, உம் வார்த்தையிலே நிலைத்திருந்து கனிகொடுக்கும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தாவே, நீர் நீதிபரர்!

ஒரு ராஜ்யத்தை நீதியாக அரசண்டு வந்த பராக்கிரமமுள்ள ராஜாவானவன், தன் ராஜ்யதிற்கு புறம்பாக இருக்கும் சிற்றூர்களிலே, பல நெருக்கடிகள் மத்தியிலே வாழ்ந்து வரும் அவ்வூர்களின் குடி மக்களுக்கு இரங்கி, அவர்களுக்கு ஒரு அழைப்பிதலை கொடுத்திருந்தார். அதன்படிக்கு, தன்னையும், தன் ஆளுகையையும் ஏற்றுக் கொள்கின்றவர்களுக்கு, தன் ராஜ்யத்திலே குடியுரிமையை பெற்றுக் கொள்ளும் சிலாக்கியத்தை அடையும் வழி ஏற்படுத்தியிருந்தான். அதை கேள்விப்பட்ட, அவ்வூர்களில் வாழ்ந்த குடிமக்கள், பலர் திரண்டு வந்தார்கள். ராஜாவையும், அவர் ஆளுகையையும் ஏற்றுக் கொள் வது என்று அறிக்கை செய்வது கடினமாக காரியமல்ல என்று அவர்கள் அந்த ராஜ்யத்திற்கு இடம் பெயர்ந்தார்கள். அப்படியாக அறிக்கையிட்டவர்கள் பலர், அந்த ராஜ்யத்தின் சலுகைகளைக் குறித்தே நோக்கமாயிருந்தார்கள். ஆனால், அந்த ராஜாவின் ஆளுகையை ஏற்றுக் கொண்ட அவர்கள், ராஜாவின் ஆளுகை நீதியின் ஆளுகை என்பதை மனதார ஏற்றுக் கொள்ளாததால், தாங்கள் முன்பிருந்த ஊர்களிலே நடப்பித்த அநீதியின் கிரியைகளை நடப்பிக்க தொடங்கினார்கள். இரக்கத்தை காண்பித்த ராஜாவானவர், தன் நீதியைவிட்டு விலகி அநீதிக்கு உடன்படுவாரோ? அவருடைய இரக்கத்தை பெற்றவர்கள், பராக்கிரமத்தை அசட்டை செய்பவர்களை பராமுகமாக விட்டுவிடுவாரரோ? ஆவர் தமது நீதியை நிலைநாட்டி, தமது பராக்கிரமத்தை காண்பிப்பார் அல்லவோ. மீட்பர் இயேசுகிறிஸ்துவின் இரத்தினாலே பாவமறக்கமுவப்பட்டு மீட்பை பெற்றுக் கொண்ட பிரியமான சகோதர சகோதரிகளே, இலவசமாக கிருபையினாலே மீட்கப்பட்டேன். தேவன் இரக்கமுள்ளவர் என்று கூறி, நீங்கள் நினைத்ததெல்லாவற்றையும் நடப்பிக்க முற்படாதிருங்கள். பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய திருக்குமாரனாகிய இயேசு வழியாக ஜீவனுள்ள புதிய மார்க்கத்தை யாவருக்கும் ஏற்படுத்தியிருக்கின்றார். அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசித்திருந்தால், அந்த மாரக்கத்திற்குரியவர்களாக வாழ ஒப்புக் கொடுங்கள். பெலவீன நேரங்களிலே, பெலனை பெற்றுக் கொள்ளும்படிக்கு, உங்கள் சுயத்திற்கு இடங்கொடாமல், பரிசுத்த ஆவயினானவர் கிரியை செய்ய இடங் கொடுங்கள். நீங்கள் தேவ ராஜ்யத்தின் பிள்ளைகளாக வாழும் வழியை அவர் அனுதினமும் உங்களுக்கு கற்றுக் கொடுக்க ஆயத்தமுள்ளவராகவே இருக்கின்றார்.

**சங்கீதம் 7:11**

**தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்.**

**ஜெபம்:** நீதியும் பராக்கிரமமுள்ள பரலோக தேவனே, நான் அழிந்து போகாதடிக்கு நீர் காண்பிக்கும் இரக்கத்தை நான் அசட்டை செய்யாமல், காலத்தை ஆதயப்படுத்திக் கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உபவாசம் எதற்கு?

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து மலைப் பிரசங்கத்தைக் குறித்து நாம் தியானித்து வருகின்றோம். இந்நாட்களிலே நாளிலே, ஆறாம் அதிகாரத்திலே, உபவாசத்தைக் குறித்து ஆண்வடவர் இயேசு கூறியதைக் குறித்து ஆராய்ந்து தியானிக்கவுள்ளோம். கடந்த நாட்களிலே, பரலோக ராஜ்யத்தைக் குறித்தும், ஜெபத்தைக் குறித்தும் மற்றும், தானதர்மங்கள், பொய் ஆணையிடுதல், விபசாரம், கொலை உட்பட பற்பல போதனைகளைக் குறித்து தியானித்து வந்தோம். ஆண்டவர் இயேசுவின் போதனை யிலே, அவர் நம்மிடத்திலே காண ப்பட வேண்டிய பொதுவான ஒரு குணாதியத்தை குறித்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுவதை காணலாம். அதாவது, நம்முடைய நோக்கமானது வெளியான கிரி யைகள் குறித்ததாக மட்டும் இருக்காமல், மிக முக்கிமாக, இருதய மானது தேவனுக்கு முன்பான ஏற்புடையதாக இருக்க வேண்டும். உள்ளான மனிதனிலே உண்டாகும் மாற்றமானது அடிப்படையானதும் அவசியமானதும் என்பதை குறித்து நாம் காண்கின்றோம். எனவே, ஒரு விசுவாசி உபவாசிக்கும் போது, முதலாவதாக நாம் உபவாசத்தின் நோக்கத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். தான் எதற்காக உபவா சிக்கின்றேன். உபவாச நாட்களிலே என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் காரியங்களை அறிந்து கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவை அறிய முன்பதாகவும், நாம் வாழ்ந்து வந்த மார்க்கங்களிலே விரதங்களையும், ஒறுத்தல்களையும் செய்து வந்திருக்கின்றோம். நாம் விட்டுவந்த அந்த முறைமைகளையும், கொள் கைகளையும் நாம் புதிதும் ஜீவனுமான இந்த மார்க்கத்திலே திணிக்கா தபடிக்கு மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சடங்காச்சாரமாக செய்யும் கிரியைகளிலே பலன் இல்லை. “பக்தியு ள்ளவர்கள் உபவாசிக்கின்றார்கள் எனவே நானும் உபவாசிக்க வேண் டும். நான் என்னை பக்தியுள்ளவனாக காண்பிக்க வேண்டும்” என்ற எண்ணங்கள் தவறானவைகள். தேவ சமுகத்திலே அப்படிப்பட்ட எண்ண ங்கள் ஏற்புடையவைகள் அல்ல. மற்றய மனிதர்களுக்கு முன்பாக நான் பக்தியுள்ளவன் என்று காண்பித்து, அவர்களிடமிருந்து சான்றிதழயையும், அவர்களுடைய அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ளவதால் உண்டா கும் பிரயோஜனம் என்ன? எனவே உபவாசிக்க முன்பதாக உபவா சத்தின் நோக்கத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.

**2 கொரிந்தியர் 4:16**

**உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

**ஜெபம்**: என் இருதயத்தை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, மனிதர்கள் காணவேண்டும் என்பதற்காக நான் உபவாசிக்காதபடிக்கு, உம்முடைய சமுயத்திலே என்னை தாழ்த்தி உமக்கு பிரியமாக நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதின் எண்ணங்களை அறிந்தவர்

குறிப்பிட்ட ஊரொன்றிலே, தொழில்நுட்ப நிபுணராக பணியாற்றும்படி ஒரு சொந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்து மனிதனாவன், தன்னுடைய பெயரும், அனுபவமும், பட்டப்படிப்புக்களும் அந்த ஊராருக்கு அறிவிக்கும்படிக்கு, பல விளரம்பரங்களை செய்து வந்தான். சில மாதங்கள் கடந்து சென்ற பின்னர், அவன் ஊரார் மத்தியிலே நன்கு அறிமுகமானான். அவனையும், அவனுடைய ஸ்தானத்தின் அலுவல்கைளைக் குறித்து அநேகர் அறிந்து கொண்டார்கள். எந்த நோக்கத்திற்காக அவன், விளம்பரங்களை செய்தானோ அதன் பலனை அடைந்து கொண்டான். அதுபோலவே, தன்னை விசுவாசி என்று அழைக்கின்ற ஒரு மனிதனானவன், மனிதர்கள் காண வேண்டும் என்று வாரந்தோறும் உபவாசித்து, தன்தைக் காண்பவர்கள், இவன் ஆவிக்குரியவன் என்று சொல்ல வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருந்தால். அவனுடைய நோக்கதின் பலனையே அவன் அடைந்து கொள்வானேயல்லாமல், தேவனிடத்தில் அவனுக்கு பலனில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, ஒரு விளம்பரம் அல்ல. வெளிவேஷமான வாழ்க்கையை கண்டு மற்றய மனிதர்கள் நம்மை புகழ்ந்து பேசலாம். ஆனால், இருதங்களை ஆராய்ந்தறிக்கின்றவர் மனிதர்களுடைய மனதின் எண்ணங்களை தூரத்திலிருந்து அறிகின்றார். கிறிஸ்த வாழ்க்கை என்பது கிறிஸ்துவை பின்பற்றும் வாழ்க்கை. அவர் காட்டி வழியிலே செல்லும் வாழ்க்கை. அந்த வாழ்க்கையை வாழ்வதற்கு, அவருடைய சிந்தையை தரித்துக் கொள்ள வேண்டும். மனத்தாழ்மையும், கீழ்படிவும் அவசியமானது. ஒரு விசுவாசியானவன், உபவாசிப்பதால், தன்னை மற்றவனைவிட மேன்மையானவன் என்று எண்ணுவானாக இருந்தால், அவன் தேவ ஆலயத்தை விட்டு செல்லும் போது, தேவனுடைய பார்வையிலே அவன் நீதிமானாக இருக்கமாட்டான். அவன் அடையும் பலன் அவனுடைய மேட்டிமையான கண்களே. எனவே, நாம் உபவாசிக்கும் போது, நோக்கமற்றவர்களாக, மற்றவர்களுக்கு காண்பிக்கும்படி, சோகமடைந்தவர்களைப்போல மற்றவர்கள் முன்பாக நம்மைக் காண்பிக்காமல், உபவாச நாட்களிலே, தேவசமுகத்திலே இருந்து ஜெபிக்கின்றவர்களாகவும்,வேதவசனங்களை தியானித்து, அதன் வெளிச்சத்திலே நம்மை ஆராய்ந்து அறிந்து தேவனிடத்தில் கிட்டிச் சேர்கின்றவர்களாகவும் காணப்படவேண்டும். நம்முடைய மனத்தாழ் மையை காணும்பரலோகத்திலிருக்கின்ற தேவன் வெளியரங்கமாக பலனளிப்பார்.

**மத்தேயு 6:18**

அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிபார்.

**ஜெபம்**: பரலேகத்திலிருக்கின்ற பிதாவே, என் இருதயம் உமக்கு முன்பாக ஏற்புடையதாக இருக்கும்படிக்கு, நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு காண்பித்து, அதிலே நடக்க எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஆகஸ்ட் 8 | 📖 மாலை வாசகம் சங்கீதம் – 35:13

# மனத்தாழ்மையோடு உபவாசியுங்கள்

பழைய ஏற்பாட்டு நாட்களிலே, தேவ ஜனங்கள் தங்கள் பாவங்களினால் உண்டான அவல நிலையை உணர்ந்து கொள்ளும் போது, தாங்கள் வழமையாக உடுத்திக் கொள்ளும் வஸ்திரங்களுக்கு பதிலாக இரட்டு த்திக் கொள்வார்கள். அதாவது சாக்கு துணியை அணிந்து கொண்டு, தங்கள் தலையிலே புழுதியை அள்ளி கொட்டிக் கொண்டு, உபவா சத்தோடும் காத்திருப்பார்கள். இரட்டுத்துதலும், புழுதியை அள்ளி கொட்டுவதும், உபவாசமும் அவர்க ளுடைய மனத்தாழ்மையை பிரதப லித்தது. அப்படியாக உண்மையான மனதோடு, இரட்டுத்தி, புழுதியை அள்ளிக் கொட்டி, உபவாசத்தோடு மனந்திரும்பி தேவனை நோக்கி பார் த்ததவர்கள் தேவ இரக்கத்தை பெற் றுக் கொண்டார்கள். ஆனால், ஒரு வன் வெளிவேடமாக, இரட்டை உடு த்துக் கொள்ள முடியும். மற்றவர்கள் காணும்படி புழுதியை அள்ளி தன் தலையிலே கொட்டிக் கொள்ள முடியும். உபவாசத்தோடு தேவ சமுக த்திலே ஜெபிக்க முடியும். அந்த மனிதனின் மனதிலே உண்மை யான மனந்திரும்புதல் இல்லாதிருக்கும் போது, அவனுடைய கிரியைகளால் தேவனிடத்தில் பலன் ஒன்றுமி ராது. கர்த்தர் இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலும், பரிசேயர்கள் வாரத்தில் இரண்டு தரம் உபவாசித்து வந்தார்கள். அவர்கள் உபவாசிக்கும் போது, அதை யாவரும் காணும்படி செய்து வந்தார்கள். அத னால், அவர்கள் தங் களை தேவ பக்தியுள்ளவர்கள் என்று காட்டிக் கொண்டார்கள். அப்ப டியானால், நாம் உபவாசிக்கும்போது, ஒருவரும் அறியாமல் இரகசி யமாக செய்ய வேண்டுமோ? தற்செயலாக ஒருவன் அதை அறிந்து கொண்டால், தேவன் அதை ஏற்றுக் கொள்ள மாட்டாரோ? துனிப்பட்ட உபவாச நாட்களை நியமிக்கும் போது, அதை பறைசாற்றாமல் அனுச ரிப்பது நல்லது. நாம் சபையாக கூடி உபவாசிக்கும் போது, பலர் அதை அறிந்து கொள்கின்றார்கள். ஆனால், நம்முடைய இருதயமானது தேவ னுக்கு முன்பாக தாழ்மையுள்ளதாக காணப்பட வேண்டும். மற்றவர்க ளுடைய புகழ்ச்சிக்கு நம் செவியை சாய்க்காமல், உபவாசத்தின் கருப் பொருளை உணர்ந்து, நம் சிந்தை கிறிஸ்துவுடைய சிந்தையைப் போல தாழ்மையுள்ளதாக இருக்க வேண்டும். நம் கண்கள் தேவனை நோக்கி பார்க்க வேண்டும். நம் செவிகள் அவருடைய வார்த்தைக்கு திறந்தி ருக்க வேண்டும். நம்முடைய வாய்கள், அவருடைய துதியை சொல்ல வேண்டும். இவைகளிலே தேவன் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

**மத்தேயு 6:16**

அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட் டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்;

**ஜெபம்:** என் சிந்தையை முன்னறிந்த தேவனே, சிந்தையும், பேச்சிலும், செய்கையிலும் நான் உமக்கு முன்பாக மனத்தாழ்மையுள்ளவனாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ சத்தத்திற்கு செவிகொடுங்கள்

ஏசாயா தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை தேவனை நோக்கி நாங்கள் உபவாசம் பண்ணும் போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன? என்று தங்கள் உபவாச நாட்களை குறித்து தேவனிடம் முறையிட்டார்கள். அவர்கள் நியாயத்தைவிட்டு விலகாமல் நீதியைச் செய்து வருகிற ஜாதியாரைப்போல் அவர்கள் நாடோறும் தேவனைத்தேடி, அவர் வழிகளை அறிய விரும்பினார்கள். நீதி நியாயங்களை அவரிடத்தில் விசாரித்து தேவனிடத்தில் சேர விரும்பினார்கள். இது அவர்கள் தங்களை குறித்து தாங்கள்கொண்டிருந்த எண்ணமாக இருந்தது. ஆனால், தேவனாகிய கர்த்தரோ, அவர்களுடைய உண்மை நிலைமையை தீர்க்கதரிசி வழியாக அவர்களுக்கு கூறினார். சத்தமிட்டுக் கூப்பிடு: அடக்கிக் கொள்ளாதே, எக்காளத்தைப்போல உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சைகளின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கின்றீர்கள். இதோ வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதிற்கும் உபவாசிக்கின்றீர்கள்: நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளிலே உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள். மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணைப்போல இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாசநாளாயிருக்குமோ இதையா உபவாசமென்றும் கர்த்தருக்கு பிரியமான நாளென்றும் சொல்லுவாய்? என்று அவர்களுடைய உபவாச நாட்களைக் பரிதாபமான நிலைமையை எடுத்துக் கூறினார். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர் உங்கள் சுத்தமனசாட்சியிலே உணர்த்திய காரியத்தை, பின்னர் செய்வேன் என்று அதை தள்ளிவிட்டு, இப்போது ஏழு நாள் உபவாசிப்பேன் அல்லது நாற்பது நாள் இரவு உணவு மட்டும் உண்ணுவேன் என்பது தேவனுக்கு பிரியமாக இருக்குமோ? இல்லை! முதலாவதாக, தேவன் சொன்ன காரியத்தை செய்யும்படி உங்களை தேவ சமுகத்திலே தாழ்த்தி ஒப்புக்கொடுத்து, அதை செய்துமுடிக்க தேவ பலத்தை நாடுங்கள். அப்பொழுது அவர் உங்கள் வழிகளிலே பிரியமாக இருப்பார்.

**ஏசாயா 58:5**

**மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ?**

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி என் வழிகளை உணர்த்தும் ஜீவனுள்ள தேவனே, உம் வார்த்தையை நான் அற்பாக எண்ணாதிருக்க, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து, உம் வழியிலே நடக்க என்னை பெலப்படுதுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கின்றேன் ஆமென்.

# தேவன் உங்களோடு பேசியவைகள்

ஒரு பண்ணையின் முதலாளியானவனின் குமாரனொருவன், தன் தந்தையின் வயலிலே அதிகமாக பிரயாசப்பட்டு உழைத்து வந்தான். தந்தையானவர், அவன்மேல் பிரியமாக இருந்தார். நாட்கள் கடந்து சென்றதும், அந்த குமாரனானவன், சில தகாதநட்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவ்வப்போது, அவர்களோடு சென்று, மதுபானம் அருந்தி, நேரத்தை செலவிட ஆரம்பித்தான். அதை கண்டு மனம் நொந்து போன தந்தையானவர், அவனை அழைத்து, அவனோடு அன்பாக பேசினார். மகனே, நீ துன்மார்க்கமாக நடக்கின்ற நண்பர்களை தெரிந்து கொண்டிருக்கின்றாய். இது வேதனைகளுக்கு ஆரம்பம், இப்போதே அவர்களை விட்டு விலகிவிடு. இல்லாவிடில் நீ துன்பப்படும் நாட்களை உனக்கு நீயே உண்டாக்கி கொள்வாய் என்றார். அதற்கு அவன், தந்தையே, நான் மாதத்திலே ஒருமுறை சென்று மட்டாக மதுபானம் அருந்துவதில் என்ன தவறு. எல்லா நிலைமைகளையும் அறிந்து, யாவற்றையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றேன் என்று கூறி, வயலிலே வேலை செய்ய சென்று விட்டான். பண்ணையிலே, தந்தையானவர், தன்னிடத்தில் கேட்காத அநேக வேலைகளை மிகவும் சிரமப்பட்டு, சீக்கரமாக செய்து முடித்துவிடுவான். ஆனால், அவனை உண்மையான நேசித்து வந்த அந்த தந்தையானவர், தன் குமாரனை சந்திக்கும் போது, அவனுடைய பிரயாசங்களை குறித்து பாராட்டினாலும், அவையாவும் பலனற்று போய்விடப் போகின்றது என்று மனவேதனையடையாமல் இருப்பாரோ? அவனுடைய வழிகளை குறித்து பிரியமாயிருப்பாரோ? தன் குமாரனானவன் துன்மாரக்க வழியை தெரிந்து கொள்ளும்போது, தன் வயலிலே வியாபாரம் பெருவதில் மேன்மையடைவரோ? சிந்தித்துப் பாருங்கள்! அந்த குமாரனைப்பற்றியல்ல, உங்கள் வழிகளை குறித்து ஆராய்ந்து பாருங்கள். தேவன் ஒருகாரியத்தை பல வருடங்களுக்கு முன் கூறியிருந்தும், அதை செய்யாமல், உபவாசத்திலும் தரித்திருந்து, தேவனே பேசும் என்று கேட்கும் போது, அவர் என்ன பேசுவார்? புதிய காரியத்தை கூறுவரோ? அவர் முன்பு உங்களோடு பேசியதை ஞாபகப்படுத்துவாரோ? ஒருவேளை அது, களியாட்டத்திற்குரிய பாவமாகவோ அல்லது வன்மம், கசப்பு, மன்னிக்க முடியாதிருக்கும் நிலைமை யாகவோ இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், நாம் உபவாசிக்க முன்பு தேவன் கூறிய காரியத்தை செய்ய நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

**1 சாமுவேல் 15:22**

**பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, என் சொந்த கிரியைகள் வழியாக நான் உம்மை பிரியப்படுத்த முயற்சிக்காமல், உம்மு டைய வார்த்தையின் வழியிலே வாழ என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பூரண அர்ப்பணிப்பு

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு விசுவாச குடும்பங்களுக்கிடையிலே, ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்த மனக்கசப்பு ஏற்பட்டால், அவர்களுக்கிடையிலேபிரிவினை உண்டாயிற்று.ஒரு குடும்பத்தின் தலைவன் மற்றய குடும்ப தலைவனை நோக்கி: நான் முழங்காற்படியிட் டேன் என்றால் என்ன நடக்கும் என்று தெரியுமா என்று கடுமையாக பேசினான். பிரியமானவர்களே, இந்த சம்பத்தை சற்றி சிந்தித்துப் பாருங்கள். தன்னை விசுவாசி என்று பல வருடங்களாக எண்ணிக் கொண்ட அந்த மனிதனானவன், தேவனையும் அவருடைய வழிகளையும் அறியாதவனாக வாழ்ந்து வந்தான். மன்னிப்பு, ஒப்புரவாகுதல், சமாதானம் செய்தல், கோபம், பகை, வன்மம் கசப்புக்களினால் ஏற்படும் பின்விளைவுகள், துன்பப்படுத்துகின்றவர்க்காக ஜெபியுங்கள், உங்கள் எதிரிகளை நேசியுங்கள், நாவடக்கத்தை கற்றுக் கொள்ளுங்கள், நீடிய பொறுமையுள்ளவர்களாயிருங்கள் என்று அநேக ஆலோசனைகள் தரும் வேத வார்த்தைகள் யாவற்றையும் மறந்து, தன்னை நீதிமான் என்று காண்பிக்கும்படி நான் முழங்காற்படியிடுவேன் என்று அகங்காரமான பேசிக் கொண்டான். இப்படியாக சிலர், தங்கள் வன்மம், பகை, கோபம், பொறாமை, முரட்டு வைராக்கியம், மனபக்கடினம் போன்ற மாம்ச இச்சைகளை மனதிலே வைத்துக் கொண்டு, என் சரீரத்திற்கு தேவையான உணவை உண்ணாமல், என் சரீரம் விரும்பும் தண்ணீரை பருகாமல், அவைகளை ஒறுத்து உபவாசம் இருப்பேன் என்று கூறினால், அதை குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள்? அது தேவனுடைய பார்வையிலே ஏற்புடைய உபவாசமாக இருக்குமோ அல்லது அது உண்ணா விரதமாக முடியுமோ என்பதை அவனவன் ஆராய்ந்து அறிந்து கொள்வது நல்லது. நித்திய வாழ்விற்கென்று அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, நாம் முற்காலங்களிலே செய்து வந்த பழைய சடங்காச்சாரங்களைவிட்டு, தேவ சமுகத்திற்கு வரும்போது, நருங்குண்டதும், நொருங்குண்டதுமான இருதயத்தோடு வர வேண்டும். மனம்வருந்தி, மனந்திரும்புகின்ற இருதயத்தை தேவன் புறக்கணிக்க மாட்டார். விசுவாசிகளுடைய உபவாசமானது, வழக்குக்கும் வாதுக்குரியதாக இருக்காமல், தேவ வழிநடத்துதலை பெற்றுக் கொள்ளும்படிக்கு, பூரண அர்ப்பணிப்புள்ளதாக இருக்க வேண்டும். அவைகளிலே தேவன் பிரியமாக இருக்கின்றார்.

**ஏசாயா 58:3**

**இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்.**

**ஜெபம்:** உம்முடைய சித்தத்தை செய்ய என்னை அழைத்த தேவனே, என் வழியை உமக்கு ஒப்புவித்து, உம்முடைய வழிநடத்துதலுக்காக காத்திருக்கும்படிக்கு எனக்கு நீடிய பொறுமையை கற்றுதந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆராய்ந்து திரும்புங்கள்

இன்றைய நாட்களிலே பொதுவாக விசுவாசிகள் எதற்காக உபவாசிக் கின்றார்கள். தங்கள் வேலை பிள்ளைகளுடைய கல்வி, வேலை, திருமணம் மற்றும் நாட்டின் சமாதானம், ஊழியங்களிலே முன்னேற்றம் மற்று சரீர சுகம் போன்றவை சில உதாரணங்ளாக இருக்கின்றது. எந்த ஒரு நிகழ்வைக் குறித்தும் நாம் தேவனிடத்திலே விண்ணப்பித்து காத்திருப்பது நல்லது. ஆனால், அந்த காத்திருப்பானது நான் விரு ம்பிய காரியம் ஆக வேண்டும். அதை தேவன் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையோடு இருக்கக்கூடாது. மாறாக, தேவ சித்தமானது நம்முடைய வாழ்க்கையிலே நிறைவேறும்படிக்கான காத்தி ருப்பாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பிள்ளையானது, தான் நினைத்த காரியத்தை பெற்றோர் அனுமதிக்கும் வரைக்கும், தன்னுடைய அறையிலிருந்து வெளியே வரமாட்டேன், எதையும் சாப்பிட மாட்டேன் என்று அறை வீட்டிற்குள் காத்திருப்தை முரட்டு பிடிவாதம் என்று கூறலாம். அவ்வி தமான நான் நினைத்த காரியம் ஆகும் வரை க்கும் தேவனை நோக்கி, உபவாசித்து காத்திருப்பேன் என்று கூறுவது தன்னைமத் தான் சேதப் படுத்திக் கொள்வதாக முடியும். தேவன்தாமே, நான் இந்த உலகத்தின் போக்கிலே சென்று கெட்டுப்போகமல், நித்திய ஜீவனை அடையும்ப டிக்கு தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனு ப்பினார். எனவே, கல்வி, வேலை, திருமணம் போன்ற எந்த காரியங்க ளும் நம்மைக் குறித்த தேவனுடைய அநாதி தீர்மானத்தினின்று நம்மை விலக்கு போடுமாக இருந்தால், அவை தேவனால் உண்டானது என்று கூற முடியாது. இந்த உலகத்தின் காரி யங்களுக்காக, மற்றவர்களுக்காக, ஊழியங்களுக்காக, தேசத்திற்காக விசுவாசிகள் உபவாசிக்கின்றார்கள். அப்படியானால், தங்கள் வழிகளை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி எவ்வளவு அதிகமாக தேவனிடத்திலே காத்திக்க வேண்டும்? பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நன் மைகள் என்று தாங்கள் நினைக்கும் காரியங்களை அவர்களுக்கு கொடு க்கின்றார்கள். இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று பிரயா சப்படுகின்றார்கள். அப்படியானால், பரம பிதா எவ்வளவு அதிகமாக நன்மையான ஈவுகளை நமக்கு கொடுப்பபார் என்பதை சிந்தித்துப் பாரு ங்கள். எனவே, இந்த உலகத்தின் காரியங்களை நோக்கி முன்னே றாமல், பரலோகம் சென்றடைவதற்குரிய காரியங்களை வாஞ்சித்து நாடு ங்கள்.

**புலம்பல் 3:40**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்த ரிடத்தில் திரும்பக்கடவோம்.**

**ஜெபம்:** என்னை அழிவிலிருந்து மீட்டுக் கொண்ட தேவனே, காலங்கள் உமது கரங்களிலே உண்டு. எனவே நான் அழிவுக்குரிய காரியங்களை பெற்றுக்கொள்ளும்படி பிடிவாதம் கொள்ளாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ இரக்கத்தை அறிந்தவர்களே!

யோனா என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனாகிய கர்த்தர் தாமே புறஜாதியரான நினிவே பட்டணத்தாருக்கு அவர்களுடைய அக் கிரமம் மிகுதியாகி விட்டது என்றும் அதனால் உண்டாகப்போகும் அழிவை குறித்த செய்தியை அனுப்பினார். இன்னும் நாற்பதுநாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்த்துப்போடப்படும் என்று யோனா தேவ செய்தியை புறஜாதி யாராகிய அந்த பட்டணத்தா ருக்கு தெரியப்படுத்டதினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவா சித்து, உபவாசஞ்செய்யும்ப டிக் கூறினார்கள் பெரியோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டி னபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியி ருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவே யிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவு ங்கடவர்கள். யாருக்குத் தெரியும் நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒரு வேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய் வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். தேவனையும் அவருடைய கிருபை இரங்க ங்களை அறிந்த தேவபிள்ளைகளே, புறஜாதியாராகிய அவர்கள் தேவன் மனஸ்தாபப்பட்டு, தங்களுக்கு இரங்குவார் என்று, தங்களை தாழ்த்தி உபவாசித்தார்கள். காரியம் அப்படியானால், தேவனையும் அவருடைய மகத்துவமுள்ள செயல்களையும் அறிந்த நாம், இன்னும் அதிகமாய் நம்மை தேவ சமுகத்திலே தாழ்த்தி, நம்முடைய வழிகளை அவருக்கு ஒப்புக்கொடுத்து, உபவாச நாட்களை ஏற்படுத்தும்போது, அவர் நமக்கு செவிகொடுப்பது அதிக நிச்சயமல்லவா? எனவே, உபவாசத்தின் கரு ப்பொருளைஉணர்ந்தவர்களாக,உபவாச நாட்களை நியமிக்கக்கடவோம்.

**சங்கீதம் 103:8**

**கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபை யுமுள்ளவர்.**

**ஜெபம்:** மருதுருக்கமுள்ள தேவனே, நான் எப்போதும் உம்முடைய சத்தத்தை கேட்டு, என் வழிகளை உம்மிடத்தில் ஒப்படைத்து, மனத்தாழ் மையோடு உம்மிடத்தில் சேர எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | ஆகஸ்ட் 14 | மாலை வாசகம் - யாக்கோபு 2:14 -17

# கர்த்தருக்கு பிரியமான உபவாசம்

உபவாசத்தின் கருப்பொருளைக் குறித்து நாம் ஆராய்ந்து தியானித்து வருகின்றோம். தேவனாகிய கர்த்தருக்கு பிரியமான உபவாசம் எது? அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்க ளை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலை யாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும் உபவாச த்தின் நோக்கதம்திற்குள் அடங்கியிருக்க வேண்டும். முதலாவதாக இது சர்வ உலகத்தை குறித்ததாகவோ, மற்றும்தேசம், ஊர், சமுகம், சபை, குடும்பம் போன்றவற்றை குறித்த தாகவோ இருப்பதற்கு முன்தாக, நம்மைகுறித்ததாக இருக்க வேண் டும். எடுத்துக்காட்டாக, ஒரு விசு வாசியானவன், தேவனுக்கு விரோ தமான அக்கிரமமான செயல்க ளைதன்னில் வைத்துக் கொண்டு, மற்றவர்களுகடைய அக்கிரமங்க ளுக்காக உபவாசிப்பது கருதற் றதாக இருக்கும். ஒடுக்கபட்ட மனிதனொருவனை ஆதரித்து விடுதலை யாக்கும்படிக்கு சரீர பெலனும் நிர்வாகமும் இருக்கும் போது, அந்த மனித னுடைய விடுதலைக்காக விசுவாசியொருவன் உபவாசித்துக் கொண்டிருந்தால், அந்த விசுவாசியைக் குறித்து நீங்கள் என்ன கூறு வீர்கள்? ஒவ்வொரு நாளும் அதிக நேரம் ஜெபித்து, வாரந்தோறும் உப வாசித்து தேவ சமுகத்திலே இருக்கின்ற ஒரு விசுவாசியானவன், சிறு மைப்பட்டவர்கள், வறியவர்கள், திக்கற்றவர்களுக்கு தன் இருதயத்தை அடைத்துக் கொண்டால், அவன் கிறிஸ்தவ பண்புடையவன் என்று கூற முடியாது. எனவே, பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடு க்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள் ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன்மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு உகந்த உபவாசமாக இருக்கும். நல்ல மரமானத நல்ல கனியைக் கொடுப்பது அதன் இயற்கை சுபாவ மாக இருக்கின்றது. அதுபோல, தேவனுக்கேற்ற நன்மைகளை நடப்பித்து தேவ பிள்ளைகளின் சுபாவமாக இருக்க வேண்டும். ஆனால், இன்று பொருளாதார மலர்ச்சியைக் கண்டிருக்கும் சிலரோ, தங்கள் சந்ததிக் கென்று ஆஸ்திகளை சேர்த்து வைத்துவிட்டு, ஏழை எளியவர் களுக்கு உதவுவதற்கு, தேவ சித்தத்தை தேடுகின்றார்கள். தேவன்பலியையல்ல இரக்கத்தை மேன்மைப்படுத்துகின்றார் என்பதை மறந்து விடாதிருங்கள்.

**ஏசாயா 58:10**

**பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நான் பக்தியுள்ளவ னென்று எண்ணி, நீர் என்மேல் காண்பிக்கும் இரக்கத்தை மற்றவர்களுக்கு காண்பிக்க மறக்காதபடிக்கு, உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழிநடத்தும் சத்திய ஆவியானவர்

இந்த உலகத்திலே ஆலயங்கள் சபைக் கட்டிடம் தேவையில்லை, தசம பாகம் காணிக்கைகள் அவசியமல்ல, ஆண்டவர் இயேசு சீக்கிரம் வந்துவிடுவார் என்று தவறாக பிரசங்கித்து திரிகின்றவர்கள், தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் என்று வீடுகளை கட்டி, தனிப்பட்ட வியாபாரங்களை ஆரம்பித்து, பங்கு சந்தையிலே முதலீடுகளை செய்து, சொத்துக்களை சேகரித்து வைக்கின்றார்கள். இப்படிப்பட்ட பொய்யான உபதேசங்களோடு கூட, உபவாசம் அவசியமானதல்ல என்றும் கூறிக்கொள்கின்றார்கள். மனசாட்சியிலே சூடுண்டுவர்களுடைய சத்தத்தை நீங்கள் கேளாமல். சத்திய வேதத்தை ஆராய்ந்து அறியும்படி, சத்திய ஆவியானவருக்கு இடங்கொடுங்கள். அக்காலத்திலே, ஆண்டவராகிய இயேசு இந்த உலக த்திலே வாழ்ந்த நாட்களிலே, யோவான் ஸ்நானனுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம் பண்ணி வந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து: யோவனுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவா சிக்கின்றார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருப்பதென்னவென்று கேட்டார்கள். அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும்வரைக்கும் உபவாசிக்க மாட்டார்களே. முணவாளன் அவர்களைவிட்டு எடுபடும் நாட்கள் வருட் அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் என்று பதிலளித்தார். அதாவது, உபவாசிப்பது ஒரு மதச்சடங்கு அல்ல. மற்றவர்கள் செய்கின்றார்கள் அதனால் நாங்களும் செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்தின்படி உபவாசிப்பது தேவனுக்கு ஏற்புடையதல்ல. விசுவாசிகள் உபவாசிப்பதற்கு காலமும் நேரமும் காரணமும் உண்டு. நான் உபவாசிக்கின்றேன், என் சபையோரில் சிலர் உபவாசிப்பதில்லை என்று ஒரு விசுவாசி எண்ணம் கொள்ளும்போது, உபவாசமானது அந்த விசுவாசியின் வாழ்விலே ஒரு சடங்காரச்சாரமாக மாறிவிடுகின்றது. முதலாவதாக, அப்படிப்பட்ட மனநிலையானது தேவ பிள்ளைக்குரிய சுபாவமாக இருக்கமுடியாது. விசுவாசிகள், சத்திய ஆவியானவர் கிரியைகளை நடப்பிக்க தங்களில் இடம் கொடுக்கும் போது, அவர் தம்முடையவர்களை சகல சத்தியத்திலும் நடத்திச் செல்வார். எனவே, குறித்த காலத்திலே பரிசுத்த உபவாசநாளை நியமித்து, தேவ சமுகத்திலே உங்களை தாழ்த்தி, கருத்தோடு அவருடைய பாத்திலே ஜெபத்திலும், தியானத்திலும் தரித்திருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

**யோவான் 16:13**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;**

**ஜெபம்:** நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு போதிக்கின்ற தேவனே, நான் எந்த காரியத்தையும் சடங்காச்சாரமாக, மற்றவர்கள் காணும்படி செய்யாமல், கருத்தோடு உம் சித்தப்படி செய்ய எனக்கு கிருபை செய்வீராக. இரட்ச கர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வழிநடத்துதலுக்காக காத்திருத்தல்

**அப்போஸ்தலர் 13:3**

**அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.**

அந்தியோக்கியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் எனப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லுகீயும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருறபோது பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களை பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர்திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து,அவர்களை அனுப்பினார்கள். இந்த சம்பவத்தை அப்போஸதலர் நடபடிகள் *13* அதிகாரத்திலே வாசிக்கலாம். இந்த உபவாசமும் ஜெபமும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு, மரித்து, உயிர்த்து, பரம் மேறி, வாக்களிக்கப்பட்ட சத்திய ஆவியானவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இன்று தங்கள் மனதில் தோன்றியபடி செய்ய விரும்புகின்றவர்கள், பரிசுத்த ஆவியானவர் வந்த பின்னர் நாம் உபவாசிக்க வேண்டியதில்லை என்று தவறாக பேதித்து வருகின்றார்கள். நீங்கள் அவர்களுக்கு செவிகொடுத்து உங்கள் நாட்களை விரயப்படுத்தாமல், உங்களுக்குள் வாசம் செய்யும் ஆவியானவருக்கு செவி கொடுங்கள். ஒரு குறிப்பிட்ட தேவனுடைய ஆலோசனையைக் குறித்து மனம் கடினப்பட்டிருக்கும் போது, வேறொரு காரியத்திற்காக உபவாசித்து ஜெபிப்பதில் என்ன பலன்? தேவன் கூறிய ஒரு காரியத்தை செய்ய முடியாமல் இருந்தால், உபவாசத்திற்கு செல்லும் போது, உங்கள் உண்மையை நிலையை தேவனிடத்தில் தெரியுங்கள். உங்கள் மனக்கடினத்தை தேவ சமுகத்திலே மனக்கடினம் என்று ஏற்றுக் கொள்ளுங்கள். சுயநீதியை நாடாமல், தேவ நீதி புரிந்து கொள்ளும் மனதை தரும்படி வேண்டிக் கொள்ளுங்கள். அப்படியாக உண்மை மனதுடன் தேவனை நோக்கிப் பார்க்கும் போது, அவருடைய சமுகத்திலே பிரியமான உபவாசமாக காணப்படும். உபவாசம் என்பது எப்போதும் புலம்பலுக்காக அல்ல. சில வேளைகளிலே, தேவ வழிநடத்துதலுக்காக விசுவாசிகள் காத்திருக்க வேண்டும். உபவாசமானது, விசுவாசிகள் தேவனுடைய வேளைக்காக காத்திருக்கும்படிக்கு இன்னும் அதிகமான மனஉறுதியை கொடுக்கும். எனவே, மனத்தாழ்மையோடு, கீழ்படிவோடும் தேவனிடத்திலே சேருங்கள். அவர் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**ஜெபம்**: காலங்களையும் நேரங்களைம் அறிந்த தேவனே, நான் என் சுய அறிவிலே காரியங்களை நடப்பிக்க துணிகரம் கொள்ளாதபடிக்கு, உமக்காக காத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் பொக்கிஷம் எங்கே?

கடந்த சில நாட்களாக, கர்த்தர் மலைப்பிரசங்கத்திலே போதித்த உபவ சத்தின் கருப்பொருளையும், உண்மையான உபவாசத்தின் வெளியர ங்கமாக பலனையும் குறித்து தியானித்து வந்தோம். இன்றைய நாட்க ளிலே தேவனாலே உண்டாகும் பலன், ஆசீர்வாதம் போன்ற வார்த் தைகள் விசுவாசிகள் மத்தியிலே கருத்து முரண்பாடுகளை உண்டாக் கியிருக்கின்றது. தேவனுடைய ஆசீர்வாதத்தை, செழிப்பின் உப தேசமாக மாற்றி, பொய்யான உபதேசங்களை தேவ உபதேச ங்களாக மாற்றி, தங்களுக்கு பூமி யிலே ஆதயமும், முடிவிலே பெரி தான பாதகமும் உண்டாகும்படி செய்து கொள்கின்றார்கள். பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளை கெடுக்கும்: இங்கே கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேமித்து வையுங்கள்: அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிதும் இல்லை: அங்கே திருடர் கன்னமிட்டு திருடு கிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று யாவரும் புரிந்து கொள்ளகூடி யவிதமாக மிகவும் தெளிவாவும், திட்டமாகவும் ஆலோசனை கூறியி ருக்கின்றார். இந்த உபதேசத்தை புரிந்து கொள்வதற்கு எத்தனை இலகு வானது! ஆனால், இறையியலிலே பாண்டித்தியம் பெற வேண்டும் என்று வேதாகம கலாசலைகளிலே கற்று, கலாநிதிப்பட்டம் பெற்ற சிலர், நித்திய ஜீவனை பிரதானமான நோக்கமாக கொண்டு கொடுக்கப்பட்ட வேத வார்த்தைகளை, தங்கள் ஆத்துமாவுக்கு கேடுண்டாக்கும்படி புரட் டுகின்றார்கள். பணம், பொருள், உலக ஆஸ்தி இவைகளை குறித்து ஆண்டவராகிய இயேசுதாமே பல சந்தர்ப்பங்களிலே மிகவும் தெளிவா கவும், திட்டமாகவும் யாவரும் விளங்கிக் கொள்ளகூடிய முறையிலே கூறியிருக்கின்றார். அவைகளை நாடித் தேடுகின்றவர்களுடைய வாழ் விலே அதனால் உண்டாகக்கூடிய கண்ணிகளையும், அந்த வழியிலே போகின்றவர்களுடைய பயங்கரமானதும், பரிதாபமுமான முடிவையும் குறித்தும் குறிப்பிட்டிருக்கின்றார். அதே வேளையிலே, அவைகளை குறித்து கூறிய இடங்களிலே மேலான பொக்கிஷ்களையும், அழியாத ராஜ்யத்தையும் குறித்தும் கூறியிருக்கின்றார். எனவே ஆண்டவராகிய இயேசு கூறிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பற்றிக்கொ ள் ளுங்கள் அப்பொழுது அவர் காட்டிய வழியிலே நடந்து கொள்வீர்கள்.

> **மத்தேயு 6:21**
>
> **உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**ஜெபம்:** நித்திய ராஜ்யத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின்மேல் ஆசைவைத்து, அழிந்து போகின்றவைகளை பின்பற்றாத படிக்கு, அழியாத மேன்மையானவைகளை தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொருளாதார பெருக்கம்

ஒரு விசுவாசியானவனின், புதிதாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும்படி தன் மனதிலே தீர்மானம் செய்து கொண்டு, அன்று மாலையிலே, தேவனை நோக்கி: தேவனாகிய கர்த்தாவே, இந்த காரியம் உமக்கு சித்தம் இல்லையென்றால் என்னை தடுத்து நிறுத்தும் என்று ஜெபம் செய்துவிட்டு படுக்கைக்கு சென்றான். காலையிலே எழுந்து வியாபா ரத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களை தீவிரமான செய்து, சில கிழமைக்குள் அவை யாவற் றையும் செய்து முடித்த பின்னர், வியாபாரத்தை திறந்து வைப்பத ற்காக, ஜெபம் செய்யும்படி ஊழி யர்களை அழைத்து, வியாபார த்தை தொடங்கினான். சில மாதங் கள் கடந்து சென்ற பின்னர், வியா பாரம் பெருக ஆரம்பித்தது. மிகவும் மகிழ்சியடைந்து, தேவனை ஸ்தோ த்தரித்தான். சபையிலே சாட்சி பகர்ந்தான். அதிக காணிக்கைகளை கொடுத்தான். ஏழை எளியவர்களுக்கு உதவினான். இப்படியான, நாட் கள் கடந்து சென்றதும், அந்த வியாபாரத்தின் வளர்சியானது, அவன் முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுவதற்கு தடையாக மாறிவிட்டது. இந்த இடத்திலே அவன் என்ன செய்ய வேண் டும்? சற்று இந்த சம்பத்தை சிந்தித்துப் பாருங்கள். அவன் வியா பாரத்தை ஆரம்பிக்கும் முன்னதாக எப்படியாக தேவ சித்ததை கேட் டான்?தேவனுடைய பதிலுக்காக காத்திருந்தானோ? அவனுடைய ஜெபம் எப்படிப்பட்டது? அவன் உலகத்திலுள்ள எல்லா ஏழைகளுக்கும் உதவி செய்து, தன் ஆத்துமாவை இழந்து போனால், அவன் பேரில் தேவன் பிரியமாக இருப்பாரோ? தன் ஆத்துமாவை தேவனித்தில் கொடுக்காத விசுவாசியினுடைய பெருந்தொகையான காணிக்கையிலே, அதை விரு ம்பும் ஒரு சில ஊழியர்கள் அவனை ஏற்றுக் கொள்ளலாம், ஆனால், நித்திய ஜீவனுக்கென்று அவனை அழைத்த தேவன், அவன் ஆத்துமா பாதாளத்தை நோக்கி போகும் போது, அழிந்து போகும் பணத்திலே பிரியமாக இருப்பாரோ? இல்லை. பிரியமான சகோதர சகோதரிகளே, முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும். எவைகள் கூட கொடுக்கப்படும்? விசுவாசிகள் மனதிலே தோன்றும் ஆசை இச்சைகள் அல்ல, அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படும். பரம பிதா, தம்முடைய பிள்ளைகளுக்கு தேவையானவைகளை அறிந்திருக் கின்றார். எனவே, தேவனுடைய ராஜ்யத்தை முதன்மைப்படுத்தும்படி, தேவ சித்தம் உங்க்ள வாழ்வில் நிறைவேற இடங்க கொடுங்கள்.

**லூக்கா 12:15**

ஏனெனில் ஒருவனுக்கு எவ் வளவு திரளான ஆஸ்தி இரு ந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.

**ஜெபம்:** முடிவில்லாத ராஜ்யத்திற்காக என்னை அழைத்த தேவனே, என்னுடைய உணர்வுகளின்படி என் வாழ்;கையை நடத்தி, கண்ணிகளிலே சிக்கிவிடாதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்கனை தந்தருள் வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்த்துவை அறியும் மேன்மைகாக

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியொருவன், உத்தம உள்ளத்தோடு தேவனை சேவித்து வந்தான். அவன் நீதி நியாயத்துடன், தன்னுடைய வியாரத்தை நடத்தி, தானும் தன் குடும்பமும், தேவனை சேவிப்பதையே தன் வாழ்வில் முதன்மைபடுத்தி வந்தான். ஆண்டுகள் கடந்து சென் றதும், அந்த ஊரின் அதிகாரிகள், சட்டத்திலே சில மாற்றங்களை அமுல்படுத்தினார்கள். அதன்படிக்கு, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக சில செயல்களுக்கு, அந்த ஊரிலுள்ள வியாபாரங்கள் ஆதரவளிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் உண்டாயிற்று. இல்லாவிடில் அந்த ஊரிலே வியாபரத்தை நடத்த முடியாது என்று கட்டளை பிறப்பித்தார்கள். உத்தம உள்ளம் கொண்ட அந்த விசுவாசியானவன், இந்த பூமியிலே என்ன நஷ்டம் வந்தாலும் நான் என் தேவனாகிய கர்த்தரின் வார்த்தைக்கு விரோதமான செயல்களுக்கு உடன்பட மாட்டேன் என்று தன் மனதிலே தீர்மானம் செய்து கொண்டு, அந்த ஊரிலே இயங்கி வந்த அவனுடைய வியாபாரத்தின் கிளையை மூடிவிட்டான். அதனால், அவனுக்கு பொருளாதார பின்னடைவு ஏற்பட்டது. ஆனால், அவனோ, தேவனோடுள்ள உறவிலே மிகவும் உறுதியாய் இருந்தான். அவன் சாட்சியுள்ள கிரியையானது பலருக்கு பக்திவிருத்தி உண்டாக்கியது. சில வாலிபர்கள் தாங்களும் அவ்வண்ணமான தேவனுக்கென்று எழுந்து நிற்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். பிரியானவர்களே, மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிட மாட்டேன் என்று ஒரு பாடலின் வரியானது அமைக்கப்பட்டுள்ளது. ஒரு விசுவாசியானவன், தன் இருதயத்திலே எதை மாணிக்கமாக வைத்திருக்கின்றான் என்பது, அவனுடைய கனிகளினாலே உறுதி செய்யப்படும். சமரசமான வாழ்வு, தங்கள் சொந்த எண்ணங்களை அமுல்படுத்த, தங்கள் கிரியைகளை நியாயப்படுத்த முயற்சி செய்தல், ராஜதந்திரமாக காய்களை நகர்த்த வேண்டும் இப்படியான கூறிக்கொள்ளபவர்களுடைய மாணிக்கம் பரலோகம் அல்ல. கிறிஸ்துவை அறியும் மேன்மைகாக எதையெல்லாம் நஷ்டம் என்றும் குப்பையென்றும் விடமனதாய் இருக்கின்றீர்கள்? ஒவ்வொருவரும் தன்னைத்தான் ஆராய்ந்து பார்க்க முடியும். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன், மனிதர்களுடைய மனதிலிருப்பவைகளை அறிந்திருக்கின்றார். அந்த மனிதனுடைய பேச்சும், நடக்கைகளும், அவனுடைய மனதிலிருப்பவைகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும்.

**பிலிப்பியர் 3:8**

அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

**ஜெபம்:** நிலையற்ற உலகத்திலே வாழும் என்னை நிலையான பரலோகத்திற்கு அழைத்த தேவனே, உமக்கு விரோதமாக நான் பாவம் செய்யாமல், மனிதர்கள் முன்னிலையில் உமக்கு சாட்சியாக இருக்க பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மை எது? தீமை எது?

மனிதர்களுடைய வாழ்க்கையிலே பற்பல காரியங்களை தங்கள் பொக்கிஷங்களாக வைத்திருக்கின்றார்கள். அந்த பொக்கிஷத்தை காத்துக் கொள்ளும்படிக்கு, தங்கள் கூடுமான எதையும் செய்வதற்கு தயங்க மாட்டார்கள். அந்த பொக்கிஷமானது ஒரு நபராக இருக்கவோ, பொருளாகவோ, உலக அறிவாகவோ, பொழுதுபோக்கவோ, உடல்நலத்தை பேணுவதாகவோ அல்லது சில பழக்கவழங்கங்களாகவோ இருக்கலாம். இந்நாட்களிலே சில இடங்களிலே தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணியை அதிகமாக நேசித்து வருகின்றார்கள். சிலர், உடற்பயிற்சி செய்து, தங்கள் சரீரத்தை பராமரிப்பதை தங்கள் வாழ்விலே முதலிடமாக கொண்டிரு க்கின்றார்கள். இன்னும் சிலரோ, குடித்து, வெறித்து, போதை வஸ் துக்களாலும், பாலியல் தொடர்புகளாலும் தங்கள் சிந்தையையும் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்கின்றார்கள். இப்படியான பொக்கிஷம் என்று கூறும் போது, மனிதர்கள் பலதரப்பட்ட காரியங்களை கூறிக் கொள்கின்றார்கள். பொக்கிஷங்கள் மனிதர்களின் மனதை சிறைப்படுத்திக் கொள்ளும். அவை மனிதனுடைய மனதை மேற்கொண்டு விடுவதால், மனிதகள் தங்கள் பொக்கிஷக்களுக்கு அடிமைகளாகி விடுகின்றார்கள். சில விசுவாசிகள், தீமையான தோன்றுபவைகளை அடித் தனம் என்று கூறி, இந்த உலகிலே தங்கள் பார்வைக்கு நன்மையாக தோன்றும், கல்வி, அந்தஸ்து, ஆஸ்திகளை தங்களுக்கு பொக்கிஷங்களாகிக் கொள்கின்றார்கள். அவைகளும் தங்கள் மனக்கண்களை குருடாக்கி, அவைகள் தங்களை சிறைப்படுத்தியிருப்பதை உணராதிருக்கின்றார்கள். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, மனு ஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள். மனிதனானவனுக்கு் முன்பாக இரண்டு வகையான பொக்கிஷங்களை வைக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று அழியாத பரலோக த்திற்குரியவைகள் மற்றது இந்த பூலோகத்தோடு அழிந்து போவைகள். பரலோகத்திற்குரியவைகள் மனிதர்களை பரலோகத்திற்கு வழிநடத்தும், பூலோகத்திற்குரியவைகள் மனிதர்களை பாதாளத்திற்கு வழிநடத்தும். இரண்டிற்கு இடைப்பட்டது ஒன்றுமில்லை. இந்த சத்தியத்தை விசுவாசிகள் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். பூலோகத்திற்குரிய பொக்கிஷங்களால் தங்கள் மனதை சிறைப்படுத்திக் கொள்ளாதபடிக்கு, தங்கள் வழிகளை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே காத்துக் கொள்ள வேண்டும்.

**நீதிமொழிகள் 16:25**

**மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நன்மை எது? தீமை எது என்று அறிந்து உணர்ந்து, வாழ்வு தரும் மேலான பொக்கிஷங்களை நான் தேட நீர் எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | ஆகஸ்ட் 21

📖 மாலை வாசகம் – ரோமர் 12:1–2

# சமநிலையான வாழ்வை தேடுபவர்கள்

பரலோக பொக்கிஷங்கள் உண்டு. இந்த பூவுலகத்திலும் பொக்கிஷங்கள் உண்டு. அவை இரண்டிற்கு நடுவே, இனிப்பான இடத்தை (Sweet Spot) நான் அடைந்து விட்டேன். பரலோகத்திலும் மேன்மையானவைகளை பெற்றுக் கொள்வேன், அதுபோல இந்த பூலோகத்திலும் உச்சிதமானவைகளை பெற்றுக் கொண்டு சமநிலையாக வாழ வேண்டும் என்று கூறும் சில விசுவாசமார்க்கத்தாரை கண்டிருப்பீர்கள். இவர்கள் இரு மனம் உடையவர்கள். இரண்டு தோணியிலே கால்களை வைக்க முயற்சிக்கின்றவர்கள். அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வாழ விரும்புகின்றவர்கள். உலகத்தால் பகைப்படாமலும் அதே வேளையிலே பரலோகத்திலும் ஏற்றுக் கொள்ள பட்டவர்கள் என்றும் தங்களை எண்ணிக் கொள்கின்றார்கள். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் "உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." *(1 யோவான் 2:15-17)* என்று பரிசுத்த வேதாகமம் தெளிவாக எச்சரிப்பை கூறுகின்றது. பிரியமானவர்களே, தன்னை விசுவாசி என்று கூறிக் கொள்ளும் ஒருவன், இரண்டில் ஒரு பக்கத்தில் நிற்க முடியும். இந்த உலகத்தின் போக்கில் வாழாதபடியால், உலகம் அவனை பகைக்கும். அவன் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியமால், தேவ சித்ததிற்கு தன்னை ஒப்புக் கொடுக்கும் போது, அவன் தேவனுக்கு பிரியமானவனாக இருப்பான். அது ஒரு பக்கம். வாழ்க்கையில் சமரசம் செய்து உலகத்தின் போக்கில் வாழ தன்னை ஒப்புக் கொடுக்கும் போது, அவன் மனக் கண்கள் குருடாகி விடுகின்றது. சுத்தமனசாட்சி சூடுண்டு போய்விடுகின்றது. இருதயம் கடினப்பட்டு போய்விடுகின்றது. உலகம் அவனை ஏற்றுக் கொள்ளும். ஆனால் அவன் தேவனுக்கு பிரியமுள்ளவனாக இருக்க மாட்டான். அது எதிரடையான மற்றப் பக்கம். எனவே, உங்கள் வழிகளை ஆராய்ந்து பார்த்து கர்த்தரிடத்தில் திரும்புங்கள். கர்த்தருடைய சத்த்திற்கு செவி கொடுங்கள். பரலேகத்திற்குரிய மேன்மையானவைகளை நாடித் தேடுங்கள்.

**1 யோவான் 2:15**

**ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, போலியான உலகத்தின் தத்துவங்வங்களை பின்பற்றி, உம்முடைய வார்த்தையைவிட்டு விலகாதபடிக்கு நீர் என் கால்களை ஸ்திரப்படுத்தி, நன்மையை கண்டடைய வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?

பரலோகத்திற்குரியவர்களாக மறுரூபமாக்கப்படுதலிலும், இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்து வாழ்வதிலும் சரியான சமநிலையோடு (Balanced Life ) வாழ்வதென்பது மாய்மாலமான வாழ்வாக இருக்கும். சபையிலே, விசுவாசிகள் மத்தியிலே, ஞாயிற்று கிழமைகளிலே ஒரு வாழ்வு. சொந்த பந்தங்கள், நண்பர்கள் மற்றும் வெளி இடங்கிலே இன்னுமொரு வாழ்வு. கிறிஸ்துவை தரித்திருக்கின்றேன் என்று கூறும் எந்த விசுவாசியும், எல்லா இடங்களிலும், எல்லோர் முன்னிலையிலும் கிறிஸ்துவை தரித்தவர்களாக காணப்பட வேண்டும். மற்றவர்கள் கிறிஸ்துவை எங்களில் காண வேண்டும். அப்படி கிறிஸ்துவை எங்களில் காணும் போது, இந்த உலகத்தின் போக்கில் வாழ்கின்றவர்களுக்கு அது இடறலாக இருக்கும். “பன்றிகளுக்கு முன் முத்தை போடாதிருங்கள் என்ற பிரகாரம், கிறிஸ்துவையும் இரட்சிப்பையும் பற்றி நான் என் நண்பர்களுக்கு கூறுவதில்லை” என்று ஒரு விசுவாசி கூறிக் கொண்டான். சற்று இந்த கூற்றை ஆராய்ந்து பாருங்கள். அந்த விசுவாசியின் வாய்மொழியின்படி அவனுக்கு பன்றிகளைப் போன்ற நண்பர்கள் உண்டு. அவர்களோடு போக்கும் வரத்துமாக இருந்து வருகின்றான். அவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றியும், இரட்சிப்பைப்பற்றியையும் கூறுவதில்லை. ஆனால், அவர்களோடு அவன் ஐக்கியமாக இருப்பதில் இரண்டு சாராருக்கும் எந்த பிரச்சனைகளும் இல்லை. இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம், உற்றார், உறவினர், பாடசாலை நண்பர்கள், போன்றவர்கள் மட்டுமல்ல, அயலவர்கள், சமுகத்தில் வாழ்பவர்கள், ஊரலுள்ளவர்கள், தேசத்தில் குடியிருக்கின்றவர்கள், அகில உலகத்திலே வாழ்கின்றவர்கள் யாவரும் இரட்சிப்படைய வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்காக நாம் ஜெபம் செய்ய வேண்டும். ஆனால், இரட்சிப்படைந்தவர்களின் இருதயமானது பரலோகதிற்குரியவைகளை நாட வேண்டும். நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் இல்லை. ஒளிக்கும் இருக்கும் ஐக்கியம் இல்லை. ஒரு விசுவாசியானவன் நான் இருளுக்கும் ஒளிக்கும் இடையிலே சமநிலையான வாழ்க்கை வாழ்கின்றேன் என்று கூற முடியுமா?

**2 கொரிந்தியர் 6:14-15**

நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

**ஜெபம்**: அந்தகார இருளில் இருந்து ஆச்சரியமான ஒளிக்கு என்னை அழைத்த தேவனே, நான் மறுபடியும் இருளின் அதிகாரத்திற்குரியவைகளோடு ஐக்கியமாக இராதபடிக்கு நீர் என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதனால் ஜெயிக்கப்பட்டிருக்கின்றீர்கள்?

மரணத்திற்கேதுவான பாவத்திற்கானாலும், நீதிக்கேதுவான கீழ்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவதினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:16-18). மனிதர்கள் தீமைக்கு மாத்திரம் அடிமைகளாகின்றார்களா? இல்லை, "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கின்றானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" என்று பரிசுத்த வேதாகமத்திலே பேதுரு எழுதின இரண்டாம் நிருபத்திலே வாசிக்கின்றோம். ஆண்டவர் இயேசுவின் தாயாகிய மரியாள், இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்று தன்னை தேவனுடைய பூரண சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தாள். அவ்வண்ணமாகவே, ஆண்டவர் இயேசுவை பின்பற்றிய அப்போஸ்தலர்களும், தேவ சித்தம் செய்யும்படிக்கு தங்களை தாங்கள் மனப்பூர்வமாக தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுத்தார்கள். ஆனால், தங்களை விசுவாசிகள் என்று கூறிக் கொள்ளும் சிலர், இந்த உலகத்திலே பொக்கிஷங்கள் என்று கருதப்படுபவைகளை, தேவ ஆசீர்வாதம் என்று போதித்து, சபை நடுவே சாட்சி பகர்ந்து, அவைகளை நாடித் தேடுகின்றார்கள். காலப் போக்கிலே அவைகள் இவர்களை மேற்கொண்டு விடுவதால், இவர்கள் அவைகளுக்கு அடிமைகளாகிவிடுகின்றார்கள். உலக பொக்கிஷம் இவர்களை சிறைபடுத்திக் கொண்டு விடுகின்றது. இந்த உலகத்தின் ஐசவரியத்தின் மயக்கம் இவர்களை பற்றிக் கொண்டதை உணராமல் வாழ்கின்றார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரைத் தரிதுக் கொண்டு, உலகத்தின் போக்கிற்கு அடிமைகளாக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களே, தேவனுடைய வீட்டிற்கும் உலகத்திற்கும் பாலம் அமைக்க கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். உலகத்தின் வேஷத்தை சபைகளுக்கு அறிமுகம் செய்கின்றார்கள். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் எஜமானனாகிய கிறிஸ்துக்கு உங்களை அர்பணித்திருந்தால், அவருடனேகூட எழுந்ததுண்டானால், அவரால் ஜெயம் பெற்றிருந்தால், அவர் இருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை தேடுங்கள்.

**ரோமர் 6:18**

**தேவனுக்கு ஸ்தோதிரம். பாவதினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.**

**ஜெபம்:** அந்தகார இருளில் இருந்து ஆச்சரியமான ஒளிக்கு என்னை அழைத்த தேவனே, நான் மறுபடியும் இருளின் அதிகாரத்திற்குரியவைகளோடு ஐக்கியமாக இராதபடிக்கு நீர் என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்தின் பொக்கிஷம் என்ன?

விசுவாசத்தின் தந்தையென்று அழைக்கப்படும் ஆபிரகாம், மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளுடைய சீமானாயிருந்தான் (ஆதி 13:2). தேவனால் உத்தமனும் சர்மார்கனும் என்று சாட்சி பெற்ற யோபு, கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். (யோபு 1:3). ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் ஆண்டவர் இயேசுவுடனே கூட இருந்தார்கள் (லூக்கா 8:3).

**1 தீமோத்தேயு 6:6**

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.**

யூதர்களுக்கு பயந்ததால், இயேசுவுக்கு இரகசிய சீஷனாக இருந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஐசுவரியவானாக இருந்தான் (யோவான் 19:38, மத்தேயு 27:57) எனவே செல்வந்தனாக வாழ்வதில் தவறில்லை. நானும் அவர்களைப் போல செல்வத்தோடு தேவனை சேவிப்பேன் என்று விசுவாசிகளில் சிலர் கூறிக் கொள்வதை கேட்டிருப்பீர்கள். ஒருவன், தேவனுக்கு முன்பாக விசுவாசித்திலே ஆபிரகாமைப் போலவும், சோதனைகளிலே யோபைப் போலவும் இருந்தால் அது அவனுக்கு நன்மையாகவே இருக்கும். இப்படியான வேதத்திலே குறிப்பிட்ட ஒருசில ஐசுவரியவான்கள் தேவனுக்கு பயந்திருந்ததால் அவருக்கு முன்பாகவும், ஜனங்களுக்கு முன்பாகவும் உண்மையும் உத்தமுதாக நடந்தார்கள். ஆனால், பொதுவாக யோபுவைப் போல சீமானாக இருக்கும் மனிதர்கள் சபைக்கு வரும் போது, தங்கள் செல்வத்தினால் சபையை ஆண்டுகொள்ளும்படி கிரியைகளை நடத்துகின்றார்கள். உபத்திரவங்களின் மிகவும் சிறிதாகிய ஒன்றைக்கூட சகித்துக் கொள்ள முடியாத அவர்கள், எந்த வகையிலும் தாங்களோ தங்கள் குடும்பங்களோ முன்னுரிமைகளை பெற்றுக் கொள்ளாதவிடத்து, தங்களுக்கு ஏற்ற சபையை நாடிச் செல்கின்றார்கள். ஆனால், வேதத்திலே பெரும் சாட்சி பெற்ற பெயர்களாகிய யோபு, ஆபிரகாம், தாவீது என்ற செல்வந்தர்களோடே தங்களை ஒப்பிட்டு பேசிக் கொள்வார்கள். பிரியமானவர்களே, நியாயத்தீர்ப்பு செய்வது எந்த வகையிலும் எங்களுக்குரிய தல்ல ஆனால், தேவனையும், உலக பொருளையும் ஒருவன் சேவிக்க முடியாது என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, அவனவன் தன் தன் இருயதத்தின் பொக்கிஷம் என்ன என்பதை ஆராய்ந்தறிவது அவனவனுக்கு நன்மையுண்டாக்கும். உயர்விலும் தாழ்விலும் போதுமென்கின்ற மனநிலையோடு வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து நினைவுகளை அறிகின்ற தேவனே, நான் இந்த உலகத்தின் செல்வத்தினாலே உணர்வற்றுப் போய்விடாத படிக்கு, என் படியை எனக்கு அளந்து என்னை போஷpத்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஐசுவரியத்தின் பெருக்கம்

தேவ கற்பனைகளை கைகொண்டு வருகின்றேன் என்று எண்ணிக் கொள்ளும் ஒரு விசுவாசியானவன், தன் பொக்கிஷத்தை எங்கே சேர்த்து வைக்கின்றான் என்பதை அவன் தேவ வார்த்தையின் வெளிச் சத்திலே ஆராய்ந்து அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது. ஒரு சமயம், தன் சிறுவயதிலிருந்து தேவ கற்பனைகளை கைகொண்டு வந்த தலைவன் ஒருவன் ஆண்டவர் இயேசுவினிடத்தில் வந்தான். அவ னுக்கு இந்த உலகத்தின் பொக்க ிஷங்கள் மிகுதியாக இருந்தும், பரலோக பொக்கிஷமாகிய நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற வாஞ்சையுள்ளவனாக இருந்தான். அவன் சிறு வயதுமுதல் தேவ கற்பனைகளை கைகொண்டு வந்த சன்மார்கனாக இருந்தான். அவன் ஒரு தலைவனாக இருந்தும் மனத்தாழ்மையுள்ளவனாக இருந்ததால், ஆண்டவர் இயேசுவை தேடி வந்தான். இன்னும் என்னிடத்தில் என்ன குறை இருக்கின்றது என்று கேட்டான். அவனிடத்தல் அன்பு கூர்ந்த ஆண்டவராகிய இயேசுதாமே, அவனிடத்திலே ஒரு குறையை கண்டார். அவனுக்கு திரளான பொக் கிஷம் இந்த பூமியிலே இருந்தது. ஆனால், அவனுக்கு பரலோகத்திலே பொக்கிஷம் தேவை என்பதை அவனுக்கு சுட்டிக் காட்டும்படி, நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்கு கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு நீ என்னைப் பின்வற்றிவா என்றார். அவனோ, மிகுந்த ஐசுவரியமுள்ளவனாயிருந்தபடியால், எதை யும் கூறாமல், சற்றும் சிந்திக்காமல், துக்கத்தோடே திரும்பிப் போய் விட்டான். பிரியமானவர்களே, பரலோகத்திற்கு செல்ல வேண்டும் என்ற வாஞ்சையை கொண்டிருந்த அந்த வாலிபன், அதற்கான வழிமுறையை அறிந்த போது ஏன் துக்கமடைந்தான்? அவனுக்கு பரலோகத்தில் பொக்கிஷம் இல்லாதிருந்தால், அவன் இருதயம் எங்கே இருந்தது? என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவன் அவ்விடம்விட்டு சென்ற பின்பு, ஆண்டவராகிய இயேசுதாமே, தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகி றேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். உங்களுடைய பொக்கிஷம் எங்கே இருக்கி ன்றது?

**சங்கீதம் 62:10**

**ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின் மேல் வைக்காதேயுங்கள்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, மாயமான இந்த உலகத்தின் ஐசுவ ரியத்தின் மயக்கத்தில் அகப்பட்டு, பரலோக பொக்ஷங்களை அற்பமாக்கி விடாதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்த வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொருளாசை

ஆண்டவர் இயேசுவினிடத்தில் எத்தனையோ பாவிகள் வந்தார்கள். கொலை பாதகர், விபசாரிகள், களவு செய்யதவர்கள், பொய்சாட்சி கூறியவர்கள், தகப்பனையும் தாயையும் கனம்பண்ணாதவர்கள் போன்றவர்களும் அவரிடத்டதில் வந்திருந்தார்கள். ஆனால், அவரிடத்தில் வந்த பணக்கார வாலிபன் அவைகள் ஒன்றையும் சிறுவயதுமுதல் செய்ததில்லை என்று ஆண்டவர் இயேசுவின் முன்னியையில் அறியையிட்டான். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற ஆண்டவரும், அவன் சொல்வது பொய் என்று கூறவில்லை. அப்படியானல், அந்த பணக்கார வாலிபனின் ஒரே ஒரு குறை ஏன் ஆண்டவர் இயேசுக்கு பெரிதாக இருந்தது. உன்னிடத்தில் இருப்பதெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடு என்று அவர் எத்தனை பேருக்கு கூறினார்? ஆண்டவர் இயேசுவை பின்பற்றிய சீஷர்கள் குற்றம் ஏதும் செய்யவில்லையா? அவர்கள் அவரை அறிந்த பின்னரும் செய்தார்கள். ஆனால், அவரை உண்மையாய், மனதார பின்பற்றியவர்கள், முதலாவதாக தங்கள் குற்றங் குறைகளை ஏற்றுக் கொண்டார்கள். தங்கள் குற்றங்குறைகளிலிருந்து விடுதலையடைய வேண்டும், அவைகளை குறித்து ஏதாவது செய்ய வேண்டும் என்ற மனதையுடையவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய இருதயமானது இந்த உலகத்தின் ஆசை இச்சைகளை விட்டுவிடக்கூடாதபடிக்கு அவைகளை பற்றிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பரலோகத்தின் மேன்மைக்காக தங்கள் ஜீவனையும் அற்பமாக எண்ணினார்கள். ஆனால், இந்த பணக்கார வாலிபனுக்கு பரலோகம் செல்ல வேண்டும் என்ற வாஞ்சை இருந்தது. சன்மார்க்கனாக வாழ வேண்டும் என்ற இருதயம் இருந்தது. ஆனாலும் அவன் ஆசையோ மண்ணை பற்றிக் கொண்டிருப்பதை உணராமல், வேத பிரமாணங்களை சிறுவயது முதல் கைகொண்டு வருகின்றேன் என்று கூறினான். அந்த ஒரு குறையானது பெரிதான கண்ணி என்பதை ஆண்டவர் இயேசு அந்தப் பணக்கார வாலிப தலைவன் வழியாக அவரைப் பின்பற்றுகின்றவர்கள் யாவரும் கூறியிருக்கின்றார். எனவே, நீங்கள் ஆண்டாண்டு காலமாக தேவ கற்பனைகளை கைகொண்டிருந்தும், உங்கள் இருதயமானது பணஆசை பொருளாசை உடையதாக இருக்காதபடிக்கு, உங்கள் இருதங்களை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுங்கள். ஆண்டவர் இயேசு கனடிமானது என்று கூறிய விஷயத்தைகுறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**மத்தேயு 19:23**

ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காமல், உம்மையே எப்போதும் என் இருதயத்தில் முதன்மையாக கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பணம் அல்ல பணஆசை!

எவரையும் நியாயம் தீர்ப்பது, உள்ளாள மனிதன் தியானங்களின் நோக்கமல்ல. ஏனெனில், ஆண்டவராகிய இயேசுவே, மனிதர்களுடைய மறைவான எண்ணங்களையும், அவர்களுடைய கிரியைகள் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவரே யாவருக்காகவும் விலைமதிக்கமுடியாத தம்முடைய திருஇரத்தத்தை நிந்தினார். அவர் ஒருவரே பாவத்தின் பரகாரி, அவரே பரலோகத்திற்கு செல்லும் ஒரே வழியாவும், நீதியுள்ள நியாயாதிபதியுமாக இருக்கின்றார். இக்கால கட்டத்திலே, ஒரு விசுவாசியானவனின் வாழ்வில் ஏற்படக்கூடிய சந்தர்பங்கள், சூழ்நிலைகளை இந்த தியானங்களின் வழியான வெளிப்படுத்தின்றோம். அவைகள் தியானித்து ஒரு விசுவாசியானவன் தன் வாழ்க்கையைக் குறித்து தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே சிந்திக்க உதவியாக இருக்கும். ஆண்டவராகிய இயேசுதாமே, உலக செல்வத்தினால் உண்டாகக்கூடிய மிக பாதகமான விளைவுகளை மிகவும் தெளிவாகவும், விளங்கிக் கொள்ளகூடியதாகும் கூறியிக்கின்றார். ஆனால், சில விசுவாசிகள், தங்களிடத்தில் செல்வம் உண்டு ஆனால் செல்வத்தின் ஆசையில்லை என்று கூறிக் கொள்கின்றார்கள். அதெப்படியெனில், சபைக்கு செல்லும் ஒரு வாலிபனானவன், தன் நண்பர்களோடு சேர்ந்து, இரவு களியாட்ட விடுதிகளுக்கு சென்று வருவது வழக்கமாக இருந்தது. அதைக் குறித்து அவனிடம் யாராவது வினாவினால், “எனக்கும் அங்கு நடக்கும் காரியங்களுக்கு பங்கில்லை, ஆனால் என் நண்பர்களோடு கலந்து ரையாடும்படி நான் அங்கு சென்று வருகின்றேன்” என்று கூறிக் கொள்வான். இதை யார் ஏற்றுக் கொள்வார்கள்? இன்னுமொரு விசுவாசியானவன், தன் வீட்டிலே எல்லா வகையான மதுபானங்களை கொண்ட பற்பல விதமான போத்தல்களை சேர்த்து, காட்சிப் பொருளாக வைத்திருந்தான். அதைக் குறித்து யாராவது கேட்டால், “மதுபானம் அருந்துவது எனக்கு விருப்பமில்லை. ஆனால், மதுபானம் கொண்ட விதவிதமான போத்தல்களை சேர்த்து வைப்பது எனக்கு பொழுதுபோக்கு என்று கூறிக் கொள்வான். அவனை யார் நியாந்தீர்க்க முடியும்? இன்னுமொருவன், வருடாவரும் வீடுகளை கொள்வனவு செய்து, அநேக வீடுகளையும் வைத்திருந்தான். அவைகளினால் உண்டான ஆதாயத்தை வங்கியே சேர்த்து வைத்தான். ஆனால், “எனக்கு பொருளாசையோ, பண ஆசையோ இல்லை என்று கூறிக்கொள்வான். அவனை யார் நியாந்தீர்க்க முடியும்?

**எரேமியா 17:10**

**இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.**

**ஜெபம்**: இருதங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, வேத வார்த்தையின் வெளிச்சத்திலே என் இருதயத்தை எப்போதும் ஆராய்ந்து அறிந்து, நிலையான பொக்கித்தை நாடித் தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவைகளும் விருப்பங்களும்

புதிதாக மேற்கத்தைய நாடொன்றிற்கு குடியேறிய இரண்டு மனிதர்கள் போக்குவரத்துக்காக கார் வேண்டும்படி சென்றிருந்தார்கள். ஒருவனிட த்தில் மட்டாக பணம் இருந்ததால், தன் குடும்பத்தின் தேவைக்கு தக் கதாக ஒரு காரை கொள்வனவு செய்து கொண்டான். மற்றய மனிதனின் தகப்பனார் ஐசுவரியவான இருந்ததினாலே, அவன் தன்னுடைய தேவையை மட்டுமல்ல, மன் உள்ள த்திலிருந்த ஆசைகளை நிறைவேற் றும் படிக்கும், குடும்பத் தராதரத்தை பேணும்படிக்கும், விலையுயர்ந்தும், பிரபல்யமானதுமான காரை வேண் டிக் கொண்டான். கருப்பொருளா வது, ஒரு மனிதனுடைய கையிலே, பணம் அதிகமாக இருக்கும் போது, அவன் தன் தேவைகளை மாத்திரமல்ல, தன் ஆசைகளைும் நிறை வேற்ற வேண்டும் என்ற எண்ணங்கள் அவன் மனதிலே தோன்றும். அவன் மனைவி பிள்ளைகளின் மனதிலே தோன்றும். சராசரியான வருமானமுள்ள மனிதனொருவன், தன் பிள்ளைகளின் எதிர்காலத்தின் பிழைப்புக்னாக, அவர்கள் கல்வி கற்று பட்டம் பெற வேண்டும் என்ற எண்ணமுடையவனாக இருப்பான். ஆனால், ஐசுவரியமுள்ள மனிதனோ, உலத்திலே சிறந்த பல்கலைக ழகங்களிலே தன் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற எண்ணமு டையவனாக இருப்பான். இதில் என்ன தவறு? அதில் என்ன குறைவு? என்பது இன்றைய தியானத்தின் நோக்கமல்ல. கருப்பொருளாவது, ஐசுவரியம் பெருகும் போது, மனதின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணம் உண்டாகும். மற்றவன், இப்படியாக செய்கின்றான். அவர்களுடைய பிள்ளைகள் உலகத்தை சுற்றி வருகின்றார்கள். இப்படியான பற்பல எண்ணங்களும், அதை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையும் உண்டாகும். தங்கள் சொந்த இஷ்டப்படி, உலகத்தை சுற்றி பார்க்க வேண்டும் என்று உல்லாச பயணங்களை முன்கூடியே திட்டமிட்டு, அதற்காக ஆயத்த ங்கள் யாவையும் செய்துவிட்டு, போக்கையும் வரத்தையும் கர்த்தர் பத்திரமாக காக்க வேண்டும் என்று ஜெபிப்வர்களும் உண்டு. தங்கள் செல்வ செழிப்புக்கேற்ற, நண்பர்கள், பாடசாலைகள், நகரங்கள், வீடுகள், கடைகள் மற்றும் ஆலயங்கள், போதர்கள் என்று தேடுபவர் களும் உண்டு. எனவே, பிரியமானவர்களே, ஐசுவரிமுள்ளவர்கள் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பது எவ்வளவு அரிது என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியதை மனதிலே வைத்து தியானம் செய்யுங்கள்.

**எபிரெயர் 13:5**

**நீங்கள் பண ஆசையில்லா தவர்களாய் நடந்து, உங்களு க்கு இருக்கிறவைகள் போது மென்று எண்ணுங்கள்;**

**ஜெபம்**: என் தேவைகள் அறிந்தி பரம தந்தையாகிய என் தேவனே, ஐசுவரியத்தினால் உண்டாகும் கண்ணிக்கு என்னை விலக்கி காத்து, உம்முடைய திருவசனத்திலே நான் நிலைத்திருக்கும்படிக்கு நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வெள்ளி \| ஆகஸ்ட் 29 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 49:16 – 20 |
| --- | --- |

# இழுப்புண்டு போய்விடாதிருங்கள்

குறிப்பிட்ட ஊரொன்றிலே இருந்த ஆலயத்திற்கு சென்றிருந்த போதக ரானவர், ஆராதனையை முடித்த பின்பு, அங்கிருந்த குறிப்பிட்ட குடுபத் தினர், தங்களுக்கேற்பபடிட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுதலைக்காக ஜெபிக்கும்படிக்கு கேட்டிருந்தார்கள். அவர்களுக்காக ஜெபித்துவிட்டு சென்ற போதகர், சில ஆண்டுகளுக்கு பின்னர், அந்த ஊர் வழியாகசென்ற போது, அந்த ஆலயத்திற்கு மறுபடியும் சென் றிருந்தார். சபையிலே, குறிப்பிட்ட அந்த குடும்பத்தினரை காணவி ல்லையே அவர்கள் இன்னு மாய் கஷ்டப்படுகின்றார்களா? அவர்க ளுக்கு என்ன நடந்தது என்று கேட்டார். அதற்கு அந்த சபை யின் போதகர்: அவர்கள் வியாபா ரம் விருத்தியடைந்து, மேல்மாடி யோடு பெரிய வீட்டைக் கட்டி னார்கள். வீட்டிற்கு காவலுக்கு இரண்டு பெரிய நாய்களை வாங்கி னார்கள். ஞாயிற்று கிழமைகளில் அந்த நாய்களை கவனிக்க யாருமி ல்லை என்பதற்காக, ஆலயத்திற்கு வரமுடியாத நிலையில் இருக்கின் றார்கள் என்று கூறினார்." பிரியமானவர்களே, மனிதர்களை தேடி வரும் பிரச்சனைகள் உண்டு. ஆனால், மனிதர்கள் தேடிக் செல்லும் பிரச்ச னைகளும் உண்டு. விசுவாசிகளுடைய வாழ்க்கையிலும், அவ ர்களு டையகட்டிற்பாட்டிற்கு அப்பாற்பட்டதும், அவர்களால் தவிர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனைகள் ஏற்படுவதுண்டு. அதே வேளையில சில விசு வாசிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதும், அவர்களால் தவிர்த்து கொள்ள கூடிய பிரச்சனைகளை திட்டமிட்டு விலைக்கு வாங்கிக் கொள் கின்றார்கள். அவைகளில் அதிக படியானவைகள், தேவைக்கு மிகை யான செல்வம் கையிலிப்பதினால் அல்லது செல்வதை நாடி செல்வ தினாலும் ஏற்படுவதுண்டு. உல்லாசப் பயணங்கள், பிள்ளைகளு டைய கல்வி, விளையாட்டு, இசை சார்ந்த இதர நிகழ்ச்சிகள், புதிய வியா பாரங்கள், மிகை ஊதியத்திற்கான மேலதிகமாக வேலை என்று இன்று விசுவாசிகள் தேவனை தேடும்படி ஏற்படுத்தபட்ட நாட்களையும் நேரங் களை அற்பாக்கிக் கொள்கின்றார்கள். இவைகளின் அடிப்படிக் காரண த்தை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் தங்கள் வாழ்விலே பணத்திற்கு கொடுத்திருக்கும்முன்னுரிமை வெளிப்படும். ஆனாலும், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள முடியாதபடிக்கு சுத்த மனசாட்சியானது சூடுண்டதாக மாறிவிடுகின்றது. நீங்களோ எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**1 தீமோத்தேயு 6:9**

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.**

**ஜெபம்**: என் தேவைகளை சந்திக்கும் தேவனே, உம்மைவிட்டு என்னை தூரமாக்கும் இந்த உலகத்தின் செழிப்புக்கு நான் அடிமைப்படாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வழுவிப்போய்விடாதிருங்கள்

ஆதி அப்போஸ்தலருடைய நாட்களிலே, பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், அற்புத அடையாளங்களும், யாவருக்கும் வெளியரங்கமாக இருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள். அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடையபாதத்தில் வைத்தார்கள். இது நிர்பந்ததினால் உண்டானது அல்ல. ஆதி விசுவாசிகள் மனப்பூர்வமாகவும் தங்கள் சுயாதீனத்தின் படியும் செய்தார்கள். அந்நாட்களிலே, அனனியாவும் அவன் மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்று, இருவருமாக கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, மிகுதியை அப்போஸ்தலரிடத்திலே கொண்டு வந்து, தாங்கள் முழுவதையும் கொடுப்பது போல மாய்மாலம் பண்ணினார்கள். அவர்களுடைய காணியாட்சியை விற்று, அப்போஸ்தலரிடத்தில் கொடுக்க வேண்டும் என்று தேவனாகிய கர்த்தர் அவர்களிடத்தில் கூறவில்லை. அப்போஸ்தலர்களும் அவர்களிடத்திலே கேட்டதில்லை. எனினும் அவர்கள் மற்றவர்களைப்போல தாங்களும் இருக்க வேண்டும் என்பதற்காக, தங்கள் காணியாட்சியை விற்றார்கள். ஆனாலும், அவர்கள் ஏன் ஒருபங்கை தங்களுக்கென வைத்திருப்பதற்காக அவர்கள் தேவ சமுகத்திலே பொய் சொன்னார்கள். எதற்காக அவர்கள் தேமுகத்திலே துணிகரம் கொண்டார்கள்? தங்கள் காணியாட்சியின் ஒரு பங்கில் இருந்த ஆசையினால் அல்லவா? ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, பொருளாசையானது, பலவிதமான கண்ணிகளுக்கும் பாவங்களுக்குள்ளுக்கும் அதை உடையவர்களை தள்ளிவிடும். எனவே "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கின்றார்கள். நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" என்று பரிசுத்த வேதாகமம் ஆலோசனை கூறுகின்றது.

**1 தீமோத்தேயு 6:10**

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது;**

**ஜெபம்:** நித்தியமானவைகளை சுதந்தரிக்க என்னை அழைத்த தேவனே, நான் அதை மறந்து அநித்தியமானவைகளின்மேல் என் கண்களை பதிய வைக்காதப்படிக்கு எனக்கு கிருபை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆகஸ்ட் 31 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 16:8

# கர்த்தரை நோக்கிப் பாருங்கள்

உயரத்திலே இருக்கும் திராட்சைப் பழங்கள், எட்டாத தூரத்திலே தொங்கிக் கொண்டிருப்பதினாலே, ஒரு நரிக்கு அதைப் பறித்து சுவைக்க முடியவில்லை. அதனால், அந்த எட்டா பழம் புளிக்கும் என்று கூறியதாம். அது போல இந்த உலகத்திலே பணத்தினால் உண்டாகக்கூடிய சுகபோகங்கள், அந்தஸ்து, செல்வாக்குகளை ஒரு காலமும் அறியாத சராசரி வாழ்க்கை வாழ்பவர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்வவர்களும் செல்வ செழிப்பையும், செலவந்தவர்களையும், அவர்களுடைய வாழ்க்கை முறையையும் கடுமையாகவும் பகிரங்கமாகவும் கடிந்து கொண்டு பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இதற்கு சில விசுவாசிகளும், ஏன் சில ஊழியர்களும் கூட விதிவிலக்கானவர்கள் அல்ல. அப்படியாக காரிய ங்கள் இருக்கும் போது, அவர்களுடைய வாழ்க்கையிலே பொருளாதார விருத்தி ஏற்பட்டு, ஒரு நாளும் அறியாதிருந்த கனியை முதல் முறை சுவைத்து ருசித்தது போல, பணத்தின் ருசியை அறியும் போது, இந்த பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து வஞ்சிக்கப்பட்டு போனதை வேதத்திலுள்ள சில பாத்திரங்களைப் போல இவர்களும் முன்நோக்கியிருக்கும் சிலுவையை மறந்து, பின்நோக்கியிருக்கும் உலகத்தை நோக்கி திரும்பி பயணம் செல்ல ஆரம்பிக்கின்றார்கள். ஆனாலும், தாங்கள் பரலோகத்தை நோக்கி யாத்திரிக்கின்றோம் என்று ஆணிதரமாக கூறிக் கொள்வார்கள். தேவனாலே உண்டான ஆசீர்வாதங்கள் ஆவியின் கனிகளை ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே உருவாக்கும். அவன் இந்த உலகத்தின் வேஷத்தை களைந்து, மறுரூபமாவதை அவன் வாழ்வின் கனிகளினூடாக உறுதிப்படுத்தப்படும். அவன் தன்னிடத்தில் இருக்கும் ஐசுவரியத்தில அல்ல, தேவனின் தங்கி வாழ்க்கின்றான் என்பது வெளியரங்கமாகும். ஆனால், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டடேன் என்று பணத்தையும், அதைத் தேடுவதையும் தன் வாழ்க்கையிலேமுதன்மைப்படுத்துபவன், அவன் தேவனுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை பணத்திற்கு கொடுப்பதால், அவன் உலக செல்வத்தை தன் தெய்வமாக்கிக் கொள்கின்றான். பொருளாசையாகிய விக்கிராதனைக்கு தன்னை ஒப்புக் கொடுகின்றான். நீங்களோ உங்கள் கண்களை முன்னிருக்கும் சிலுவையிலே பதியவைத்து, கிறிஸ்து இயே சுவை நோக்கி முன்னேறுங்கள். கர்த்தர் போதுமானவராக இருக் கின்றார்.

**கொலோசெயர் 3:5**

**விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, நீர் எச்சரித்து விலக்கிய காரியங்களை ருசிபார்த்து என் வாழ்விலே பாதகமான கண்ணிகளை வரவைக்காதபடிக்கு, என் கண்களை உம்மேலே பதியவைத்து ஓட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.